# History of India from 1206 to 1707 A.D.

# **Unit – III**

## Contents

1. Bhakthi Movement – Age of Vijayanagar ........ 2

2. Mughals – Babur-Humayun ........ 21

3. Sher Shah ........ 31

4. Akbar the Great ........ 32

# 1. Bhakthi Movement – Age of Vijayanagar

பிற பண்பாட்டு மரபுகளைப் போலவே, மதமும் தனித்து இருப்பதில்லை. நிலவும் சூழ்நிலைகளோடு தன்னை தகவமைத்துக் கொண்டு மக்களின் சமூக, ஆன்மிகத் தேவைகளை மதமும் நிறைவு செய்கிறது. நீண்ட பண்பாட்டு வரலாற்றைக் கொண்டிருக்கும் நாடான இந்தியாவில், மதங்கள் பல்வகைப்பட்ட மரபுகளோடு தொடர்பு கொண்டு வளர்ந்துள்ளன. ஆரிய மொழி பேசிய மக்களின் வருகையோடு இந்தியா வந்த வேத மதம் சிந்து நாகரிகத்தின் பல கூறுகளை உள்வாங்கிக் கொண்டது. ஹரப்பாவில் தாய்த் தெய்வ வழிபாடு தொடங்குகிறது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிற்பம் சிவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்திரன், வருணன், அக்னி ஆகியோரே முக்கிய வேதக் கடவுள்கள் ஆவர். சிவன், விஷ்ணு வழிபாடு பின்னர் வளர்ந்தனவாகும். பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் (கிமு 1000) இடைப்பகுதியில் சிந்து கங்கைச் சமவெளியில் பௌத்தம், சமணம் எனும் இரு மகத்தான மதங்கள் உருவாயின. (ஆசீவகம் போன்ற ஏனைய புறக்கோட்பாட்டு மதங்கள் போன்றே) இவை வைதீக வேதமத நடைமுறைகளை எதிர்த்தன.

இதைப் போலவே பொது ஆண்டின் முதலாயிரமாண்டின் இடைப்பகுதியில் நாட்டின் தென்பகுதியில் பக்தி இயக்கம் எனும் வடிவத்தில் ஓர் உன்னதமான சமய மரபு செழித்தோங்கியது. ஒரு மதக் கோட்பாடான, பக்தியின் பொருள் ஆழமான பற்றுடன் அனைத்துக்கும் மேலான இறைவனைச் சரணடைந்து முக்தி பெறுதலாகும். பகவத்கீதை போன்ற மத நூல்கள் பக்திக்கான பாதை அல்லது பக்தி மார்க்கத்தைப் பற்றி பேசியதாலும் இவ்வியக்கம் வலுப்பெற்றது. இக்காலப் பகுதியில்தான் பௌத்தம், சமணம் ஆகியவற்றின் ஒழுக்கநெறி, கடவுள் மறுப்புக் கோட்பாடுகளுக்கு எதிராகவே இவ்வியக்கம் தோன்றியது என வரலாற்றறிஞர்கள் வாதிடுகின்றனர். வேத இறையியல், இவை இரண்டிலிருமிருந்தும் சில கூறுகளை எடுத்து இணைத்துக் கொண்டது. ஆதிசங்கரர் புறமதக் கோட்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு இந்து மதத்திற்கு அத்வைதம் எனும் தத்துவக் கோட்பாட்டை வழங்கினார். அது அறிவார்ந்தவர்களின் நிலையில் செல்வாக்குப் பெற்றது. புகழ்பெற்ற சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் உள்ளத்தை உருக்கும் பாடல்களால் பக்திக் கோட்பாட்டிற்கு ஒரு வடிவம் கொடுத்து மக்களின் ஆதரவைப் பெற்றனர். வரலாற்றாய்வாளர்கள் இதனைப் பக்தி இயக்கம் என அழைக்கின்றனர். பக்தி இயக்கம் அரச ஆதரவோடு சமூக, அரசியல், மதம், பண்பாடு, மொழி ஆகிய தளங்களில் மிக ஆழமான, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு தென்னிந்தியா 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை மத மறுமலர்ச்சியின் இல்லமாக விளங்கியது. இராமானுஜர் போன்ற இறையியலாளர்களால் அது பதினோராம் நூற்றாண்டில் ஒரு தத்துவ, சித்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது. பக்தி வழிபாடு அடியார்கள் கொடுத்த ஊக்கத்தினால் 14ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் பரவியது. நாம் இங்கு பக்தி இயக்கத்தின் பொதுவான கூறுகளையும் அதை முன்னெடுத்த முக்கியமானவர்களையும், அதன் இருவகையான போக்குகளையும் மக்களின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் பகுத்தாய்வு செய்ய உள்ளோம்.

## தென்னிந்தியாவில் பக்தி வழிபாடு

ஒரு பழங்குடிச் சமூகம் நன்கு கட்டமைக்கப்பட்ட சமூகமாக மாற்றம் பெறும் பொழுதும் அதிகாரமிக்க முடியாட்சி முறையிலான நிர்வாக முறை உருவாகும்போதும் தனது அதிகாரத்தை நியாயப்படுத்திக்கொள்ள அதற்கு ஏதாவது ஒரு மதத்தை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. பௌத்தமும் சமணமும் பெரும்பாலும் வணிகவர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டன. அரசுகளும் அவற்றை ஆதரித்தன. பக்தி இயக்கம் நிலவுடைமைச் சாதிகளிடையேயிருந்து தோன்றியதால் அது பௌத்தத்தையும் சமணத்தையும் விமர்சனம் செய்தது. இதன் விளைவாக அரசர்களின் ஆதரவைப் பெறுவதில் மோதல்கள் ஏற்பட்டன. பக்தியானது சாதி, பாலின வேறுபாடுகளின்றி அனைவராலும் அணுக இயலும் என்ற நிலையை ஏற்படுத்தியதன் மூலம் சமணமும் பௌத்தமும் பிராமணர்களின் அதிகாரத்தை எதிர்த்தன.

## பௌத்த மற்றும் சமணத்தோடு மோதல்

சான்றுகள் பக்தி இலக்கியங்கள், பெரும்பாலும் புராணங்கள், திருத்தொண்டர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் ஆகியவை தமிழகத்தில் நடைபெற்ற மத மோதல்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன. தேவாரமானது அப்பர் (திருநாவுக்கரசர்) சம்பந்தர் (திருஞான சம்பந்தர்) சுந்தரர் ஆகிய மூவரால் எழுதப்பட்டப் பாடல்களைக் கொண்டவை. இவை மூன்றும் சேர்ந்து பன்னிரு சைவத்திருமுறைகளில் முதல் ஏழுதிருமுறைகளாக இடம் பெறுகின்றன. மாணிக்கவாசகரின் பாடல்கள் எட்டாவது திருமுறை ஆகும். இவற்றில் பல பாடல்கள் பௌத்தர்களையும் சமணர்களையும் பற்றிய விமர்சனங்களை விவரிப்பவையாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி கூறும் சேக்கிழாரின் பெரியபுராணம் பக்தி இயக்கம் குறித்த முக்கியச் சான்றாகும். வைணவ அடியார்களான ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பக்தி இயக்கப் பாடல்களின் முக்கியத்துவம் யாதெனில் அவை இன்றுவரை மக்களால் படிக்கப்படுகின்றன, பாடப்படுகின்றன, வணங்கப்படுகின்றன. அவை தமிழ் இலக்கிய மரபின் முக்கியப் பகுதியாகவும் விளங்குகின்றன.

## ஆரம்ப கால மோதல்கள்

பல்லவர் காலத்தில்தான் முதன்முதலாகச் சைவமும் வைணவமும் ஒருபுறமாகவும் சிரமணப் பிரிவுகளான சமணம், பௌத்தம் மறுபுறமாகவும் இருந்து மோதிக்கொண்டன. முதலாம் மகேந்திரவர்மப் பல்லவர் சமணத்தைப் பின்பற்றியதால் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தினார். அப்பர் தொடக்கத்தில் சமணராக, தர்மசேனன் எனும் பெயருடனிருந்தார். பின்னர் தனது தமக்கையின் செல்வாக்கால் சைவமதத்தைத் தழுவினார். சில சமணர்களால் தூண்டப்பட்ட மகேந்திரவர்மன் அப்பரை மீண்டும் சமணராக மாறும்படி வற்புறுத்தினார். அப்பர் மறுத்தபோது துன்புறுத்தப்பட்டார். முடிவில் மகேந்திரவர்மனே சைவமதத்திற்கு மாறிய போது பிரச்சனை முடிவுக்கு வந்தது.

மரபுசார்ந்த ஒரு கதையின்படி சம்பந்தர் இறையியல் வாதங்களில் சமணர்களை வென்றதால் தோற்றுப்போன சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். கூன் பாண்டியன் எனவும் அறியப்பட்ட மாறவர்மன் அரிகேசரி (640-670) சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறிய பின்னர் சம்பந்தருடைய செல்வாக்கால் மீண்டும் சைவரானார். ஒரு சைவக் கதையின்படி

சைவத்திற்குத் திரும்பிய பின்னர் சமணர் பலரை மதுரை மாவட்டத்திலுள்ள சமந்தம் என்னும் ஊரில் கொல்லும்படி ஆணையிட்டதாகவும் தெரிகிறது.

சைவ சித்தாந்தம் போன்ற தத்துவ ஆய்வு நூல்கள் பௌத்த சமண தத்துவ மோதல்களை விரிவாக விளக்குகின்றன. சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியாரில் பரபக்கம் என்ற பெயரில் தனிப் பிரிவொன்றுள்ளது. அது பௌத்த சமண வாதங்களை முற்றிலுமாக எதிர்க்கின்றது. பக்தி இலக்கியங்களும் திருத்தொண்டர்களைப் பற்றிய நூல்களும் மோதல்கள் ஏற்பட்ட நிகழ்வுகளையும் புறச்சமயத்தார் தோற்கடிக்கப்பட்டதையும் விளக்குகின்றன. அவ்வாறான மோதல்கள் இறுதியில் வன்முறை சார்ந்ததாக மாற்றம் பெற்று பல சமணத் துறவிகள் கழுவில் ஏற்றப்பட்டதில் முடிந்ததெனக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.

தத்துவம் சார்ந்த வாதங்கள் ஒரு பக்கம் நடைபெற்றாலும் பக்தி இயக்கம் மன்னர் ஆதரவைப் பெற்றிருந்ததன் விளைவாக பௌத்தமும் சமணமும் தோல்வியைச் சந்தித்தன. பதினோராம் நூற்றாண்டில் இவ்விரு மதங்களும் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. பௌத்தம் தமிழகத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் முற்றிலுமாகத் துடைக்கப்பட்டாலும் தமிழ்மொழி பேசுகின்ற சமணர்கள் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். சமண பௌத்த கோவில்களும் கருவறைகளும் பெரும்பாலும் சிதைக்கப்பட்டன, அல்லது பயன்பாட்டில் இல்லாமல் ஆயின. கலைப்பொருட்கள் பல புறக்கணிக்கப்பட்டன அல்லது கொள்ளை போயின. இன்றைய அளவிலும் தமிழ்நாட்டின் பலபகுதிகளில் தலைப்பகுதி உடைக்கப்பட்டபுத்தர், சமணத்தீர்த்தங்கரர் சிலைகளைக் காணமுடிகிறது. இவ்வாறு இருந்தபோதிலும் வைதீகமும் புறச் சமயங்களும் ஒன்றோடொன்று கருத்து பரிமாற்றம் செய்துகொண்ட அடையாளங்களும் காணப்படுகின்றன. பௌத்தம், சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான துறவறத்தை சைவமும் வைணவமும் ஏற்றுக்கொண்டன. பௌத்தம், வைணவம் ஆகிய இரண்டும் எளிமையையும் உலக சுகங்களை மறுப்பதையும் முன்னிறுத்திய போது பக்தி இயக்கம், விழாக்கள், சடங்குகள் என வாழ்க்கையைக் கொண்டாடியது. சைவ உணவு, கொல்லாமை ஆகிய மதிப்பு வாய்ந்த நெறிகளும் பரஸ்பர செல்வாக்கின் விளைவாக ஏற்பட்டு இருக்கலாம். புறச் சமயங்கள் வடமொழியான பிராகிருதத்தைப் பயன்படுத்தியதற்கு எதிர்வினையாக தமிழ்மொழிக்கு மேலதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பௌத்தமும் சமணமும் ஊழ்வினைக் கோட்பாட்டை பேசியபோது பக்தி இயக்கத்தை விளக்கியவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் சரணடைவதன் மூலம் விதியை வெல்லமுடியும் எனக் கூறினர். பௌத்தம், சமணம் ஆகியவற்றுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக வேதமதங்கள் சில மாறுதல்களுக்கு உள்ளாயின.

**பக்தி இயக்கம்**

வடஇந்தியாவில் பரவுதல் தென்னிந்தியாவில் பக்தி இயக்கம் அதன்புகழின் உச்சத்தை எட்டிய போது பக்திக் கோட்பாடானது வைணவப் புலவர்களாலும் அடியார்களாலும் தத்துவத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விளக்கப்பட்டது. இராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவத்தை உருவாக்கினார். அவருடைய போதனைகள் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இரண்டல்ல ஒன்றே என்ற ஆதி சங்கரரின் கருத்தை மறுத்தன. தமிழகத்தில் பக்தி இயக்கம்

ஏழாம் நூற்றாண்டிலேயே செழித்தோங்கி இருந்த நிலையில் வடஇந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டில் தான் அது முழு வேகத்தைப் பெற்றது. இக்காலத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்திப் பாடல்கள் எழுதப்பட்டன. சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைகள், ஒதுக்கி வைத்தல், பல கடவுள்களை வணங்கும் முறை உருவ வழிபாடு போன்றவற்றால் ஏற்பட்டிருந்த சமூகப் பின்னடைவுகளுக்கு எதிராக வட இந்தியாவில் பக்தி இயக்கம் குரல் கொடுத்தது. மதச் சான்றோர்கள் மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற சடங்குகளையும் விமர்சித்தனர். வைணவ பக்தி இயக்கத்தோடு இணைந்து ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தவர்கள் அன்றைய அளவில் முக்கிய மதங்களாகத் திகழ்ந்த வைதீகம், இஸ்லாம் ஆகியவற்றிலிருந்து விலகி சுதந்திரப் பாதையைப் பின்பற்றினர். இவ்விரு மதங்களிலிருந்த மூடநம்பிக்கைகளையும் பழமைவாதத்தையும் விமர்சித்தனர்.

துருக்கியப் படையெடுப்போடு கூடிய இஸ்லாமின் வருகை வேத மதங்களுக்கும் குருமார்களுக்கும் பெரும் சவாலாகத் திகழ்ந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் இஸ்லாம் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியது. அதிகமான இந்தியர்கள் முஸ்லீம்களாயினர். இஸ்லாம் அரசு அதிகாரத்தோடு சமத்துவத்தை முன்வைத்தது இந்தியச் சமூகத்தில் கீழ்நிலையில் இருந்தோரைக் கவர்ந்தது.

புதிய அரசியல் சமூகச் சூழல் பிரதான மதங்களின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை ஓர் இயக்கமாக்கியது. இவ்வியக்கம் சாதி முறைக்கு எதிரானதாகவும், வேதங்களுக்கும் புராணங்களுக்கும் எதிரானதாகவும் உருவானது. பண்பாட்டுத் தளத்திலும் இவ்வியக்கம் பிராந்திய மொழிகளின் வளர்ச்சி இந்துஸ்தானி இசையின் வளர்ச்சி போன்ற தாக்கங்களை ஏற்படுத்தியது.

முஸ்லீம்களின் அரசியல் அதிகாரத்திற்கு எதிரான இந்துக்களின் எதிர்வினை பன்முகத் தன்மை கொண்டதாய் இருந்தது. ஒருபுறம் புதிய மதத்திற்கு எதிராக வெறுப்பினைக் கொண்டிருந்தபோதும், புதிய சவால்களை எதிர்கொள்ளும் அளவுக்கு வலிமையை பெருக்க வேண்டுமெனின் இந்து மதத்திற்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்வும் தோன்றியது. இதன் முக்கிய விளைவாக கபீர், குருநானக் மற்றும் ரவிதாஸ் ஆகியோரின் இயக்கங்கள் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தின.

**சூபியிஸத்தின் தாக்கம்**

இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் அதைப் போன்ற கருத்துக்களை சூபியிஸம் கொண்டிருந்தது. சூபி, வாலி, தர்வீஷ், பக்கீர் ஆகிய பெயர்கள் இஸ்லாமிய ஞானிகளைக் குறிப்பதாகும். இவர்கள் தியானம், யோகப் பயிற்சிகள், துறவறம், தியாகம் போன்றவற்றின் மூலம் உள்ளுணர்வைப் பெருக்கி இறை நிலையை உணர்ந்தவர்களாவர். 12ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் சமூக வாழ்வில் சூபியிஸம் செல்வாக்குப் பெற்ற சக்தியாக விளங்கியது.

சூபியிஸம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கமாகும். மதம், சமூக வேறுபாடுகள் என்ற எல்லைகளைத் தாண்டி சூபிகள் ஒட்டுமொத்த மனித குலத்தின் மேம்பாட்டிற்காகப் பணி செய்தனர் தத்துவ ஞானிகளான இவர்கள் தங்கள் பரந்த மனப்பான்மைக்காகப் பெயர் பெற்றனர். இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின்

உச்சம் எனசூபிகள் கருதினர். அவ்வழகைக் கண்டு ஆச்சரியப்படல் வேண்டும், அதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுதல் வேண்டும், முழுக்கவனத்தையும் இறைவன் மேல் குவித்தல் வேண்டும் என்றனர். அவர்கள் கடவுளை மஸ்க் (நேசிக்கப்பட வேண்டியவர்) என்றும் தங்களை ஆசிக் (நேசிப்பவர்கள்) என்றும் நம்பினர். பின்னாளில் சூபியிஸம் பல பிரிவுகளைக் கொண்டதாக மாறியது. சிஸ்டி, சுரவார்டி, குவாதிரியா, நஸ்பந்தி ஆகியன முக்கியப் பிரிவுகளாகும்.

சூபியிஸம் நகர்ப் புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வேர்கொண்டது. சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சூபியிஸம் அனைத்து விதமான மதச்சம்பிரதாயம், பழமைவாதம் வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது. ஆன்மீகப் பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது. அரசியல் அதிகாரத்திற்காக மோதிக்கொள்வதே இயல்பாக இருந்த ஒரு சூழலில், போர்களாலும் போட்டிகளால் சூழல் பாழ்பட்டுக்கிடந்த நிலையில் சூபிகள் அமைதியையும் மகிழ்ச்சியையும் நிலைநாட்டப் பணியாற்றினர். சூபிகளின் மகத்தான பங்களிப்பு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான வெறுப்பின் கூரிய முனைகளை மழுங்கடித்து அவர்களிடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தியதாகும்.

**பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள்**

1. பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
2. பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட முடியும் என நம்பினர். இறைவனிடம் ஆழமான பற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன்வைத்தனர்.
3. இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்.
4. குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.
5. உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர்.
6. உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர்.
7. ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டுமென வலியுறுத்தினர்.
8. மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தைகளே எனக் கூறினர். பிறப்பின் அடிப்படையில் மக்களைப் பிரித்து வைக்கும் சாதிமுறையைக் கண்டனம் செய்தனர்.
9. சடங்குகள், சம்பிரதாயங்கள், புனிதயாத்திரைகள், நோன்புகள் ஆகியவற்றைக் கண்டனம் செய்தனர்.
10. 10. எந்த மொழியையும் புனிதமான மொழி என அவர்கள் கருதவில்லை. மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.

**பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள்**

**கபீர்**

இடைக்கால இந்தியாவின் மிக முக்கியமான பண்பாட்டு ஆளுமையாகக் கபீர் கருதப்படுகிறார். புனிதங்கள் எனக் கருதப்பட்டவற்றை கேள்விக்குறியாக்கும் அ வரு டை ய பாடல்கள் சடங்குகள், சம்பிரதாயங்களைக் கபீர் கேலிக்குரியதாக்கி, கடவுள் எங்கும்

நிறைந்திருக்கிறார் என்ற கருத்தை முன்வைத்தன. இவருடைய கருத்துகளால் கவரப்பட்ட மக்கள் இவரைப் பின்பற்றினர். அவருடைய வாழ்க்கையைப் பற்றி மிகக் குறைவான செய்திகளே கிடைத்துள்ளன. நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இராமானந்தரின் சீடராக, அவரிடமிருந்து வேதாந்தத் தத்துவத்தைக் கற்றுக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. பிரபலமான, தஸ்கிரா - இ - ஆலியா - இ - ஹிந்த் (இஸ்லாமிய துறவிகளின் வாழ்க்கை ) எனும் நூல் அவரை சூபி துறவியான ஷேக் தகி என்பவரின் சீடராகச் சித்தரிக்கிறது. முற்போக்கான மதச் சிந்தனைகளைக் கொண்ட கபீர் இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களிலுள்ள பிரிவினை வாதங்களையும், குறுகிய மனப்பான்மைகளையும் எதிர்த்தார். இந்து சமூகத்தின் கீழ்த்தட்டுக்களைச் சார்ந்த மக்கள் அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டனர். உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதிமுறை ஆகியன கைவிடப்பட வேண்டுமெனஉறுதிபடக்கூறினார். அதே சமயத்தில் இஸ்லாமிலிருந்த சம்பிரதாயங்களையும் கடுமையாக விமர்சித்தார். கடவுளின் மேல் உண்மையான பற்றுதலைக் கொண்டிருந்த அவர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிக்கும் தடைகளை உடைக்க முயன்றார். கடவுளை அடைய அவர் கண்டடைந்த பாதை கீழ்நிலையில் உள்ளோர்க்கும் மேல்நிலையில் உள்ளோர்க்கும் ஏற்புடையதாயிருந்தது. அவருடைய பாடல்கள் இன்றுவரை இந்தியாவின் பல பகுதிகளில் பாடப்பட்டுவருகின்றன.

**ரவிதாஸ்**

15, 16ஆம் நூற்றாண்டின் பக்தி இயக்கத்தைச் சேர்ந்த கவிஞரும் துறவியுமாவார். பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களால் குருவாக ரவிதாஸ் வணங்கப்படுபவர். அவர் இயற்றிய பக்திப் பாடல்கள் பக்தி இயக்கத்தின் மேல் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. ரவிதாஸின் வாழ்க்கை விவரங்களைப் பற்றி உறுதியான செய்திகள் இல்லை. கிடைத்துள்ள செய்திகளிலும் முரண்பாடுகளுள்ளன. பெரும்பான்மையான வரலாற்றறிஞர்கள் அவரை தோல் பதனிடுவோர் குடும்பத்தைச் சேர்ந்தவரெனக் கூறியுள்ளனர். இவர் பக்தி இயக்கத்துறவியும் புலவருமான இராமானந்தரின் சீடர்களின் ஒருவராவார். சீக்கியரின் மதப் பாடல்களில் ரவிதாசரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சாதி அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் ஆண், பெண் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராகப் பேசினார். ஆன்மீக விடுதலையைப் பெறும் முயற்சியில் ஒற்றுமையை ஊக்குவித்தார்.

**குரு நானக் (1469-1539)**

குரு நானக் மிகப்பெரும் அமைப்பின் செல்வாக்குமிக்க துறவியாவார். அவரால் நிறுவப்பட்ட சீக்கிய மதம் அவருடைய, ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பண்பாட்டு ஒற்றுமைச் சிந்தனையைப் பறை சாற்றுகிறது. ஒரு கடவுள் கோட்பாட்டைக் கொண்ட சீக்கிய மதம் கடவுள் ஒருவரே என்ற கருத்தையும், ஒழுக்க நெறிகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியது. இரண்டு நூற்றாண்டுகளில், பத்து சீக்கிய குருக்களின் தலைமையில் சீக்கிய மதம் பஞ்சாப் முழுவதும் விரிவடைந்து பெருவாரியான மக்களை ஈர்த்தது. சீக்கிய மதப் போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தின. அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழல் முகலாயப் பேரரசுடன் பகைமையை உருவாக்கி அடக்குமுறைக்கு வழி வகுத்து

இறுதியில் குருக்களின் உயிர்த்தியாகத்தில் முடிந்தது. குரு கோவிந்த சிங் சீக்கிய மதத்தின் கடைசி குரு ஆவார். அவருக்குப் பின்னர் கிரந்த சாகிப் (புனித நூல்) குருவாகக் கருதப்பட்டது. குரு நானக்கின் போதனைகள் ஆதிகிரந்தம் ஆகும். ஏனைய சீக்கிய குருக்களின் போதனைகளும், இராமானந்தர், சைதன்யர், நாமதேவர், கபீர், ஷேக் பரித் போன்ற பக்தி இயக்க கவிஞர்களின் சூபி துறவிகளின் போதனைகளும் ஆதி கிரந்தத் தோடு சேர்த்து குரு கிரந்த சாகிப் எனப்படுகிறது

**சைதன்யர் (1485-1533)**

வங்காளத்தைச் சேர்ந்த சைதன்யர் பக்தி இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையை பிரதிபலித்தார். கபீர் மற்றும் அவரை தொடர்ந்து வந்த பக்தி இயக்கத் துறவிகளின் போதனைகளிலிருந்து அவர் வேறுபட்டார். அனைத்து வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் இறைவனை சைதன்யர் புரிந்துகொள்ள மக்களை ஒருங்கிணைத்த கபீரைப் போலல்லாமல் சைதன்யர் ஏனைய கடவுள்களைக்காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் எனக்கொண்டார். வேறு வகையில் சொல்வதென்றால் சைதன்யருடைய இயக்கம் ஒருமைப்பாட்டிற்கான இயக்கமல்ல, மாறாக இது ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகும். விஷ்ணுவின் பல வடிவங்களில் பரவசத்தைத் தரும் கிருஷ்ணரின் வழிபாட்டுக்குத் திரும்புவதாகும்.

வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயலவில்லை. மாறாக விஷ்ணுவின் மேல் பக்தி கொள்ள வற்புறுத்தினர். இருந்தபோதிலும் பல சமூகங்களிலிருந்து சைதன்யருக்குச் சீடர்கள் உருவாயினர். சைதன்யர் இறை வழிபாட்டில் குழுவாகக் கூடிப் பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடும் பழக்கத்தைப் பிரபலமாக்கினார். அவருடைய இயக்கம் வங்காளத்திலும் ஒரிசாவிலும் பிரபலமானது.

**நாமதேவர்**

மகாராஷ்டிராவில் சதாரா மாவட்டத்தில் நரஸ் வாமணி எனும் கிராமத்தில் தையல் கலைஞரின் மகனாகப் பிறந்த நாமதேவர், ஜனதேவர் எனும் துறவியினால் ஈர்க்கப்பட்டு பக்தி இயக்கத்தில் பங்கெடுத்தார். பந்தர்பூரிலுள்ள விட்டலா (விஷ்ணு அவதாரம் )வின் மேல் தீவிர பக்தி கொண்ட நாமதேவர் தன் சீடர்களுடன் பெரும்பாலான நாமதேவர் நேரத்தை இறை வழிபாட்டிலும் தானே இயற்றிய பாடல்களைப் பாடுவதிலும் கழித்தார். மராத்திய, இந்தி மொழிகளில் அபங்க (மகாராஷ்டிராவைச் சேர்ந்த இந்து மத குருமார்கள் இறைவனைப் புகழ்ந்து எழுதிய பாடல்கள்) என்றழைக்கப்பட்ட பாடல்களை எழுதினார். அவர் பஞ்சாப் வரை பயணம் மேற்கொண்டார். பஞ்சாபிலும் அவருடைய போதனைகள் பிரபலமாயின. பின்னர் அவை குருகிரந்தத்தில் சேர்க்கப்பட்டன. முழுமையான இதயத்தோடு இறைவனை வணங்குங்கள், மதப் பணி சார்ந்த வாழ்வை வாழுங்கள். உறுதியான பக்தியுடன் அனைத்தையும் இறைவனிடம் அர்ப்பணியுங்கள்" என்பனவே அவருடைய செய்திகளின் சாரமாகும்.

**இராமானந்தர் (1400-1476)**

சைதன்யர் மாதாவாச்சாரியாரின் (வேதாந்தத்தில் துவைதக் கொள்கையை முன்னிறுத்தியவர்) தத்துவப் பள்ளியைச் சேர்ந்தவர். இராமானந்தர் இராமானுஜரின்

கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். பிரயாகையில் (அலகாபாத்) பிறந்த இராமானந்தர் இராமானந்தர் காசியில் இந்து மதத் தத்துவத்தில் உயர்கல்வியைக் கற்று இராமானுஜரின் பள்ளியில் போதகராகப் பணியிலமர்ந்தார். வட இந்தியாவின் புனிதத் தலங்களுக்குச் சென்று வந்த அவர் வைணவத்தை போதித்தார். இராமர் சீதை ஆகியோரிடம் பக்தி வைத்தல் என்று தானே உருவாக்கிய புதிய கோட்பாட்டின் அடிப்படையில் வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையைப் போதித்தார். சாதிமுறையை நிராகரித்த அவர் குறிப்பாக இந்து மதத்தின் பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் பிராமணர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்தார். சமூகத்தின் அடித்தளத்தைச் சேர்ந்த மக்கள் இவரைப் பின்பற்றினர். ரவிதாஸ், கபீர் மற்றும் இரண்டு பெண்கள் அவருடைய பன்னிரண்டு சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது மரபு. பிராந்திய மொழியான இந்தியில் தனது கொள்கைகளை போதித்தவர்களில் முதலாமவர் இராமானந்தரே. இதன் காரணமாகவே அனைத்துத் தரப்பு மக்களாலும் அறியப்பட்டவரானார். இவருடைய சீடர்கள் மிதவாதிகள், முற்போக்கர்கள் என இரு பிரிவாகப் பிரிந்தனர்.

**மீராபாய் (1498-1546)**

மீராபாய் ராஜஸ்தானில், மேர்தா மாவட்டத்தில் குத் எனும் ஊரில் பிறந்தார். ஜோத்பூர் அரசை நிறுவிய ராணா ஜோதாஜியின் கொள்ளுப் பேத்தி ஆவார். இவர் மேவாரின் அரசனான ராணா சங்காவின் மகன் போஜராஜன் என்பாரை மணந்தார். கிருஷ்ணரின் தீவிர பக்தையாக மாறிய அவர் அரண்மனையை விட்டு வெளியேறி, அன்பே கடவுளை அடையும் வழியென் போதனை செய்யவும் பஜனைப் பாடல்களைப் பாடவும் தொடங்கினார். கடவுளை கிருஷ்ணர் எனும் பெயரில் வணங்க வேண்டுமென்றும், பிறப்பு, செல்வம், வயது, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் கிருஷ்ணருடைய அருள் யாருக்கும் மறுக்கப்படக் கூடாது எனப் போதித்தார். அவருடைய பக்திப் பாடல்களும் இசைப்பாடல்களும் வளமான பண்பாட்டு மரபாகும். அவருடைய போதனைகள் தெய்வீகபக்தி என்னும் செய்தியை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்றது.

**சூர்தாஸ்**

அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த சூர்தாஸ் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகன் எனப் பலராலும் அறியப்பட்டவர். சூர்தாஸ் தில்லி சுல்தானியர் காலத்து, வைணவப் போதகரான வல்லபாச்சாரியாரின் சீடர் என நம்பப்படுகிறது. வல்லபாச்சாரியார் புஷ்தி மார்க்கத்தை (அருள்பாதை) நிறுவியவராவார். சூர்தாஸ் அன்பெனும் மதத்தையும் தனிப்பட்ட கடவுளிடம் பக்தி யோடிருப்பதையும் போதித்தார். கடவுள் கிருஷ்ணரைக் குறித்து இந்தி மொழியில் உணர்வு பூர்வமான பாடல்களை இயற்றினார். சூர்தாஸின் கவிதைகளில் கிருஷ்ணருடைய பாலலீலா முக்கியக் கருப்பொருளாக விளங்கியது. அவருக்குக் கிருஷ்ணர் தெய்வீகமானவர். அவரைப் பொருத்த அளவில் காதல் என்பது உணர்வுபூர்வமான கருப்பொருளாகும். பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் மீது கோபியர் கொண்ட கட்டுப்படுத்த இயலாத காதலை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றார். கோபியர் வெளிப்படுத்திய காதலின் தீவிரம் என்பது ஒரு தெய்வீக ஆன்மாவின் மேல் மனித ஆன்மா கொண்டிருக்கும் இயற்கையான கவர்ச்சியின் வெளிப்பாடென்றார். சூர்சாகர், சூர்சரவளி, சாஹித்ய லஹரி

ஆகியன அவருடைய முக்கியப் படைப்புகளாகும். அவருடைய மாபெரும் படைப்பான சூர்சாகர் அல்லது சூர்சமுத்திரம் கிருஷ்ணர் பிறந்ததிலிருந்து மதுராவுக்கு புறப்படும் வரையிலான கதைகளைக் கொண்டுள்ளது.

**துக்காராம்**

துக்காராம் 1608ஆம் ஆண்டு மஹாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார். சத்ரபதி சிவாஜி, ஏக்நாத், ராம்தாஸ் போன்றோரின் சமகாலத்தவர். துக்காராம் தொடக்கத்தில் ஒரு வணிகராக இருந்த இவர் பின்னர் தனக்குப் பிரியமான கடவுளான பந்தர்பூர் விட்டலாவின் புகழைப்பாடும் பாடல்களைப் பாடுவதில் நேரத்தை செலவிட்டார். துக்காராம் கடவுள் வடிவமற்றவர் என நம்பினார். அவரைப் பொருத்த அளவில் உலக நடவடிக்கைகளில் ஆன்மீக இன்பத்தைத் துயக்க முடியாது எனக் கூறினார். வேத வேள்விகள், சடங்குகள், புனிதப் பயணங்கள், உருவ வழிபாடு ஆகியவற்றை நிராகரித்தார். கடவுள் பற்று மன்னிக்கும் மனப்பாங்கு மன அமைதி ஆகியவற்றைப் போதித்தார். சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய செய்திகளைப் பரப்பினார். இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். அவர் தன்னுடைய அயங்க பாடல்களை மராத்தி மொழியில் எழுதினார்.

**பக்தி இயக்கத்தின் தாக்கங்கள்**

முக்தி என்பது வர்ணாஸ்ரமக் கொள்கையின்படி முதல் மூன்று படி நிலைகளைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமே உரியது என்ற நம்பிக்கையை மாற்றி அது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது. பக்தி இயக்கம் பெண்களுக்கும் சமூகத்தின் அடித்தட்டிலிருந்த மக்களுக்கும் சேர்த்து ஆன்ம விடுதலைக்கான வழியைக் காட்டியது. பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்கள் எண்ணிக்கையில் பெருகின. பக்தி இயக்கத்தைச் சேர்ந்த துறவிகள் தத்துவ ஞானத் துறையில் சிறந்து விளங்கி துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவக் கோட்பாடுகளை வழங்கினர். இக்காலத்தில் பிராந்திய அளவில் நடைமுறையிலிருந்த பண்பாட்டுப் பழக்கங்களான, அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவது பண்டிகைகள், விழாக்கள் நடத்துவது, புனிதப் பயணங்கள் செல்வது, சைவ, வைணவச் சடங்குகளை செய்வது ஆகியன இன்றுவரை நடைமுறையில் உள்ளன.

**<u>விஜயநகரப் பேரரசு</u>**

**தோற்றமும் விரிவாக்கமும்**

விஜயநகரப் பேரரசின் உருவாக்கம் தொடர்பாக பல மரபுசார்ந்த செய்திகள் உள்ளன. சமகாலக் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில், பொதுவாக ஏற்கப்படும் கருத்து யாதெனில் சங்கமரின் இரு புதல்வர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோர் ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த பின்னர் தங்களை சுதந்திர அரசர்களாக நிலை நிறுத்திக் கொண்டு 1336இல் புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர். இந்நிகழ்வு ஹொய்சாள அரசர் மூன்றாம் பல்லாலர், மதுரை சுல்தானால் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றிருக்க வேண்டும். தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது. ஆனால் விரைவில் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள் நகரமான ஹொசபட்னா (ஹம்பிக்கு அருகே) என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

தலைநகரம் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜயநகரம் எனப் புதிய பெயர் சூட்டப்பட்டது. இதன் பின்னர் அவர்கள் தங்களை விஜயநகர அல்லது கர்நாடக - விஜயநகர அரசர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். 1346ஆம் ஆண்டு ஹரிஹரரின் முடிசூட்டு விழா கொண்டாடப்பட்டது. வரலாற்றறிஞர்கள் ஹரிஹரர், புக்கர் தொடங்கிய இவ்வரச வம்சத்தை அவரின் தந்தையாரின் பெயரில் அல்லது மூதாதையரின் பெயரில் சங்கம வம்சம் என அழைத்தனர். விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான பன்றி (வராகம்) உருவத்தைத் தங்களது அரச முத்திரையாகக் கொண்டனர்.

விஜயநகர அரசு நான்கு அரச வம்சத்து அரசர்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டது. சங்கம வம்சம் (1336-1485), சாளுவ வம்சம் (1485-1505), துளுவ வம்சம் (1505-1570), ஆரவீடு வம்சம் (1570-1650) என இவ்வரசின் வரலாற்றை நான்கு கட்டங்களாக விவரிக்கலாம்.

தொடக்கத்தில் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ளூர் தலைவர்களால் ஆளப்பட்டு வந்து பல சிற்றரசுகளைப் போலவே விஜயநகர அரசும் இருந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டின் பெரிய அரசுகளான தமிழ்நாட்டில் பாண்டியர், கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாளர், ஆந்திர காகத்தியர் ஆகிய மூன்று அரசுகளும் பதினான்காம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்புகளால் அழிவுற்று பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த இச்சூழ்நிலை சங்கம வம்சத்தை சேர்ந்த ஹரிஹரர் முதலான ஐந்து சகோதரர்களுக்கு தங்கள் பகுதிகளை ஒருங்கிணைக்கவும் விரிவாக்கம் செய்யவும் வாய்ப்பினை வழங்கியது. மேலும் சற்றே முன்னதாக உருவாக்கப்பட்ட மதுரை சுல்தானியமும், 1347இல் உருவான பாமினி அரசும் தில்லியின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர அரசுகளாயின. தில்லி சுல்தானியமே பலவீனம் அடைந்ததால் அது தென்னிந்தியாவின் மேல் அதிக ஆர்வம் காட்டவில்லை.

விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாகக் குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது. முதலில் கர்நாடகாவில் ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகள் விஜயநகரோடு இணைக்கப்பட்டன. தொடர்ந்து கர்நாடகாவின் கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவை இறுதி வரை நாட்டின் முக்கியப் பகுதியாகவே இருந்தன. பல துறைமுகங்களைச் சென்றடையும் வாய்ப்பினை இப்பகுதி கொண்டிருந்ததால் இப்பகுதியின் பிரதானிகள் அல்லது ஆளுநர்கள் இப்பகுதியின் நிர்வாகத்தில் அக்கறை செலுத்தினர். முதலாம் புக்கரின் ஆட்சியின் போது தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது. தமிழகத்தின் வட மாவட்டங்களை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதியை சம்புவராயர் ஆண்டு வந்தனர். இளவரசர் கம்பணர் - ஆல் (வழக்கமாக குமார கம்பணர் என்பர்) தன் நம்பிக்கைக்குரிய தளபதி மாரையா நாயக்கரின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக முடித்தார். மேலும் மதுரை சுல்தானை 1370இல் கொன்றதன் மூலம் மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த பெருமையும் குமார கம்பண்ணாவைச் சாரும். இச்செய்தி குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி சமஸ்கிருத மொழியில் எழுதிய மதுரா விஜயம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மதுரை உள்ளிட்ட பாண்டிய நாடு அப்போது விஜயநகர அரசோடு இணையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப்பின்னர் 1500 வாக்கில் பாண்டிய நாடு விஜயநகர அரசின் ஒரு பகுதியானது.

அதுவரையிலும் தமிழகத்தின் வடபகுதிகளும் காவேரி வடிநிலப் பகுதி வரையிலான மத்தியப் பகுதிகளுமே சங்கம் - சாளுவவம்ச அரசுகளின் நேரடி நிர்வாகத்தின் கீழிருந்தன.

**விஜயநகர் - பாமினி மோதல்**

தொடக்கத்திலிருந்தே பாமினி விஜயநகர அரசுகள் தொடர்ந்து மோதிக் கொண்டன. இடங்களைக் கைப்பற்றுதல், கப்பம் வசூலித்தல், குதிரை வாணிகத்தின் மேலான கட்டுப்பாடு ஆகியவற்றில் ஏற்பட்ட போட்டியே மோதல்களுக்கான முக்கியக் காரணங்களாகும். கிருஷ்ணா, துங்கபத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட வளம் மிக்க ரெய்ச்சூர் பகுதியை இணைத்துக்கொள்ளவும், மேலாதிக்கம் செலுத்தவும் இருவருமே விரும்பினர். ஆனால் இருவராலும் முழுமையான வெற்றியைப் பெற இயலவில்லை. நிலையற்ற சிறிய வெற்றிகளுக்காகப் பெருமளவில் ரத்தம் சிந்தப்பட்டது. சில வரலாற்று ஆய்வாளர்கள் இந்து விஜயநகரத்திற்கும் இஸ்லாமிய பாமினி அரசுகளுக்கு இடையே நிலவிய மதப் பகைமையே தொடர்ந்த போர்களுக்கான அடிப்படைக் காரணமென்று கருதுகின்றனர். ஆனால் உண்மையில் விஜயநகர அரசர்கள் முஸ்லீம்கள் அல்லாத இந்து அரசுகளான வாராங்கல், கொண்டவீடு, ஒரிசா ஆகியவற்றுடன் போரிட்டபோது முஸ்லீம் அரசுகள் சில சமயம் விஜயநகருக்கு ஆதரவாகவும் சில சமயம் எதிர்தரப்புக்கு ஆதரவாகவும் பங்கேற்றனர். கோவா மற்றும் ஏனைய துறைமுகங்கள் வழியாக நடைபெற்ற குதிரை வாணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதில் ஏற்பட்ட போட்டி இப்போர்களுக்கு மற்றொரு காரணமாகும். தொடர்ந்து போரிட்டுக்கொண்டாலும் கிருஷ்ணா நதியே ஏறக்குறைய இவ்விருவரையும் பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.

ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவைச் சேர்ந்த கஜபதி அரசுக்கும் விஜயநகருக்குமிடையே நடைபெற்றது. இரண்டாம் தேவராயர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இப்பிரச்சனையில் விஜயநகரால் பெரும் வெற்றி என எதையும் பெற இயலவில்லை. இரண்டாம் தேவராயர் (1422-46) ஒரியர்களைச் சில போர்களில் தோற்கடித்தார். இப்போர்கள் அனைத்தும் கப்பம் வசூல் செய்வதற்காகவே நடைபெற்றன. இடங்கள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்படவில்லை. சங்கம் வம்ச அரசர்களுள் மிகச் சிறந்த அரசர் இரண்டாம் தேவராயர் ஆவார். தன்னுடைய குதிரைப் படையின் வலிமையைப் பெருக்குவதற்காகப் பயிற்சி பெற்ற முஸ்லீம் குதிரைப்படை வீரர்களைத் தனது படைகளில் சேர்த்துக் கொண்டார். இரண்டாம் தேவராயரின் காலத்தில் இங்கு வந்த பாரசீக நாட்டின் தூதுவர் அப்துர் ரஸாக் கொச்சி சாமரின் அரசவைக்கும் விஜயநகரத்திற்கும் வருகை தந்தார். இரண்டாம் தேவராயர் மிகப்பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தினார் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாம் தேவராயர் இலங்கை அரசனிடமிருந்தும் கப்பம் பெற்றார்.

இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் பிரச்சனைகள் தலைதூக்கின. வாரிசுரிமைச் சண்டைகளும் திறமையற்ற அரசர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதின் விளைவாக கஜபதி அரசர்கள் ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். 1460 - 65க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் பலமுறைதாக்குதல்களை மேற்கொண்டன. மேலும் திருச்சிராப்பள்ளி வரை வெற்றிகரமாகப் படையெடுத்து வந்த கஜபதி படைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு கோவில்களின் செல்வத்தையும் கொள்ளையடித்தன.

இச்சூழலை சாதகமாகப் பயன்படுத்திய குறுநில மன்னர்கள் சுதந்திர அரசர்களாயினர். சாளுவ வம்ச அரசர்களின் எழுச்சி வரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பகுதிகளில் திருமலைத்தேவர், கோனேரித்தேவர் போன்ற குறுநில மன்னர்கள் ஒரு சில பத்தாண்டுகள் சுதந்திர அரசர்களைப் போல ஆட்சி நடத்தினர்.

காலத்தின் நகர்வில் அரசியல் அதிகாரம் நம்பிக்கைக்குரிய தளபதி சாளுவ நரசிம்மரின் கைகளுக்குச் சென்றது. அவர் கஜபதிகளிடமிருந்து நாட்டைக் காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்டார். 1485இல் அரசாட்சியைக் கைப்பற்றி தன்னையே அரசரென அறிவித்து, குறுகிய காலமே ஆட்சி செய்து சாளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவருடைய தளபதியும் மாபெரும் போர்வீரருமான நரச நாயக்கர் அவருக்குத் துணை நின்றார். அவர் தென்பகுதியில் கலகத்தில் ஈடுபட்ட உள்ளூர் தலைவர்களை அடக்க முயன்றார். 1491இல் சாளுவநரசிம்மர் மரணமடைந்தார். அதற்கு முன்பாக தனது இளம் வயது மகன்களை நரச நாயக்கரின் பாதுகாப்பில் விட்டுச் சென்றார். உண்மையான ஆட்சி அதிகாரம் தனது கைகளுக்கு வரப்பெற்ற நரச நாயக்கர் தனது மரணம் வரையிலும் நாட்டைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1505இல் அவருடைய மூத்த மகன் வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். சிறிது காலமே ஆட்சி செய்தாலும் அவரது ஆட்சிக் காலம் முக்கிய நிகழ்வுகளைக் கொண்டதாய் அமைந்தது. அவரைத் தொடர்ந்து அவருடைய தம்பி கிருஷ்ணதேவராயர் அரியணை ஏறினார்.

**கிருஷ்ண தேவராயர் (1509-1529)**

கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசர்களில் மகத்தானவராகக் கருதப்படுகிறார். தனது தந்தையும் அண்ணனும் அமைத்துக் கொடுத்த வலுவான ராணுவ அடித்தளத்தின் மீது அவர் ஒரு பேரரசைக் கட்டினார். தனது நாட்டின் பெருமைக்குக் குறை ஏற்படாமலிருக்கப் பல படையெடுப்புகளை மேற்கொண்டார். தனது ஆட்சியின் தொடக்கத்தில் மைசூருக்கு அருகேயிருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனைத் தோற்கடித்துப் பணியச் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் இரு முனைகளில் போரிட வேண்டியிருந்தது. ஒன்று பரம்பரை எதிரிகளான பாமினி சுல்தான்களுடன், மற்றொன்று ஒரிசாவின் கஜபதி அரசர்களுடன். அவருடைய கிழக்குத்திசை படையெடுப்பின்போது கஜபதி அரசர்களின் வசமிருந்த உதயகிரி கோட்டையைப் போன்று பல கோட்டைகள் கைப்பற்றப்பட்டதைப் பற்றிப் பல கட்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன. முடிவில் அவர் தனது வெற்றித் தூணை சிம்மாச்சலத்தில் நிறுவினார்.

பாமினி படைகளை முறியடிப்பதற்காகக் கிருஷ்ணதேவராயர் ஒன்றுக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை ஆண்டுதோறும் மேற்கொள்ள நேர்ந்தது. ஏனெனில் ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாமினிப் படைகள் விஜயநகரை ஊடுருவின. ஒரு சில படையெடுப்புகளின் போது, மலபார், கொங்கணக் கடற்கரைப் பகுதிகளில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவுவதற்கு

முயன்று கொண்டிருந்த போர்த்துகீசியர் விஜயநகருக்கு இராணுவ உதவிகளைச் செய்தனர். மேலும் பத்கல் என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையைப் பெற்றனர். அவர் மிகப்பெரும் வெற்றியாளராக இருந்தபோதிலும் கிருஷ்ணதேவராயர் பெற்ற

வெற்றிகள், தங்களுக்கிடையே தொடர்ந்து போர் செய்து கொண்டிருந்த தக்காண சுல்தானிய அரசுகளை ஒற்றுமை கொள்ளச் செய்தன.

கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசின் மகத்தான அரசர் எனப்போற்றப்படுவதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. ஸ்ரீசைலம், திருப்பதி, காளஹஸ்தி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சைவ, வைணவக் கோவில்களுக்குப் பெருமளவில் கொடையளித்தார். பல கோவில்களில் அவர் எழுப்பிய கோபுரங்கள் இன்று வரை உள்ளன. விஜயநகருக்கு வருகை தந்த சமகாலத்து வெளிநாட்டுப் பயணிகளான நூனிஸ், பயஸ் போன்றோர் அவருடைய ஆளுமை குறித்தும் விஜயநகரத்தின் உயர் நிலை, செல்வச் செழிப்பு ஆகியன பற்றியும் பாராட்டுகளை விட்டுச் சென்றுள்ளனர். அவருடைய அரசவையை அல்லசானிபெத்தண்ணா, நந்தி திம்மண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர். கிருஷ்ண தேவராயரே பெரும் அறிஞராக கருதப்படுகிறார். ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார். ஆனாலும் அவருடைய தலை சிறந்த சாதனை, ஒரு மதிநுட்பம் மிக்க நிர்வாகியாக அவர் நாயக்கர் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைப்பு செய்து அதற்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுத்ததாகும். அது நிர்வாக முறை என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

**தலைக் கோட்டைப் போர் (1565)**

கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரர் அச்சுததேவராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் விரைவிலேயே வாரிசு உரிமைப் பிரச்சனை தலை தூக்கியது.

கிருஷ்ணதேவராயரின் மருமகனான ராமராயர் அச்சிறு வயது இளவரசனுக்குப் பட்டம் சூட்டுவதன் வழியாக அரசியல் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார். இருந்தபோதிலும் அச்சுதராயருக்கு செல்லப்பா (சாளுவநாயக்கர் என்றும் அறியப்படுபவர்) என்பாரின் ஆதரவு இருந்தது. அக்கால கட்டத்தில் சிறப்பிடம் வகித்த இவர் தமிழகத்தின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். காலப்போக்கில் இவரே கிளர்ச்சியில் ஈடுபட அச்சுதராயர் பெரும்படையோடு தென்னகம் வந்து இவரை அடக்கினார். அச்சுத் தேவராயர் பாமினி சுல்தான்களோடும் சில போர்களை மேற்கொண்டார். 1542 இல் அவர் மரணமடைந்தபோது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அரச பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆண்டார் (1542-70). ஆனால் உண்மையான அதிகாரம் ராமராயரின் கைகளில் இருந்தது. பல நெருங்கிய உறவினர்களின் (ஆரவீடு வம்சாவளியினர்) ஆதரவு அவருக்கு இருந்தது. அரசின் பல முக்கியப் பொறுப்புகளில் அவர் தன் உறவினர்களை அமர்த்தினார்.

சிறந்த வீரரும் ராணுவ வல்லுநருமான ராமராயர் பாமினி சுல்தான்களை ஒருவரோடு ஒருவரை மோதச் செய்யும் திறமை பெற்றிருந்தார். போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள் அனுப்பப்படுவதை நிறுத்தினார். சில காலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கைகோர்த்தார். இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சி விஜயநகருக்கு எதிராகப் பெரும் பகையை வளர்த்தது. இதன் விளைவாக, தக்காண சுல்தான்கள் தங்களது பரஸ்பர பகையை மறந்து ஒன்றுபட்டு, பொது எதிரிக்கு எதிராக இறுதிப்போர் புரிய கைகோத்தனர். ஜனவரி 23, 1565இல்

தலைக்கோட்டை அல்லது ராக்சஷி - தங்கடி போர் நடைபெற்றது. தனது வயது முதிர்வையும் பொருட்படுத்தாது ராமராயரே படைப்பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று தனது சகோதரர்கள், ஏனைய உறவினர்களோடு போர்க்களம் புகுந்தார். போரின் இறுதிக்கட்டத்தில் விஜயநகரம் தோல்வியடைந்தது. ராமராயர் கைது செய்யப்பட்டு உடனடியாகக் கொல்லப்பட்டார். வெற்றிபெற்ற பாமினிப் படைகள், தங்களது வரலாற்றில் முதன்முறை விஜயநகரத்துக்குள் புகுந்தன. பல மாதங்கள் அந்நகரைக் கொள்ளையடித்துச் சூறையாடி பாழ்படுத்தின.

பொதுவாக இப்போர் விஜயநகர் அரசின் முடிவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அரசர் சதாசிவராயரும் அவருடைய வீரர்களும் பெனுகொண்டாவுக்குத் தப்பிச் சென்றனர். ராமராயரின் சகோதரர் திருமலை 1570இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரசமரபான ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகன்களும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இருதலைமுறை காலத்திற்கு 1630 வரை ஆட்சி புரிந்தனர். வேறுசில அரசர்கள் நிரந்தரத் தலைநகரமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர். பல நாயக்கத் தலைவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உண்மையான அதிகாரத்தோடு ஆட்சி புரிந்தனர். அவர்களில் சிலர் அரசரை ஆதரித்தனர். வேறுசிலர் அரசரை எதிர்த்தனர். இவ்விரு பிரிவுகளுக்கிடையே சில போர்கள் நடைபெற்றனர். 1601இல் அரசு விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம் நாயக்கர் தலைமையிலும் எதிர் தரப்பினர் வேலூர் நாயக்கர் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேரூரில் கடுமையான போரில் ஈடுபட்டனர். இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கரை ஆதரித்தனர்.

**நிர்வாகம்**

அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார். அவரே படைத்தளபதியும் ஆவார். அவருக்குப் பல உயர்மட்ட அதிகாரிகள் உதவி செய்தனர். முதலமைச்சர் மகாபிரதானி என்றழைக்கப்பட்டார். தளவாய் (தளபதி), வாசல் (அரண்மனைப் பாதுகாவலர்), ராயசம் (செயலர் கணக்கர்), அடைப்பம் (தனி உதவியாளர்), காரிய கர்த்தா (செயல் முகவர்) போன்ற கீழ்நிலை அதிகாரிகளுக்கு இவரே தலைமையாவார். முதலாம் ஹரிஹரரும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து அவற்றில் நிர்வாக அமைப்புகளை உருவாக்க முயன்றனர். ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார். ஹொய்சாள, ராஜ்யா, அரகா, பரகூர், மங்களூர், முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும். புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்பட்ட போது புதிய ராஜ்யாக்கள் உருவாயின. 1400இல் தமிழகப் பகுதிகளில் சந்திரகிரி, படைவீடு, வலுதலம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் என ஐந்து ராஜ்யங்கள் இருந்தன. பிரதானி அரசவை உறுப்பினராகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ இருப்பார். இவர் அரச குடும்பத்திற்கு உறவினர் அல்ல. நிர்வாகத்தில் அவருக்கு உதவி செய்யக் கணக்கர்களும் ராணுவ அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு ராஜ்யமும் நாடு, சீமை, ஸ்தலம், கம்பனா எனும் சிறிய நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமமாகும். துளுவ

வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரால் நாயக்கர் முறை அறிமுகமானபோது ராஜ்யங்கள் தங்களது நிர்வாக, வருவாய் முக்கியத்துவத்தை இழந்தன.

**நாயக்க முறை**

நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இராணுவத்தலைவர், அல்லது இராணுவவீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டில் காகத்திய அரசில் ஒரு நாயக்கின் இராணுவ சேவைக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாயை வழங்கும் முறை நடைமுறையில் இருந்தது. இது தில்லி சுல்தானியத்தில் பின்பற்றப்பட்ட இக்தா முறையைப் போன்றதாகும். ஆனால் விஜயநகர அரசில் இராணுவ சேவைக்குப் பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று. கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக்கட்டணம் எனவும், நாயக்தானம் என கன்னடத்திலும், நாயன்கரமு எனத் தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன. இம்முறையானது கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் ஆகியோரின் ஆட்சியின் போது நிறுவன வடிவம் பெற்றது.

கல்வெட்டுச் சான்றுகளும் நூனிஸ், பயஸ் போன்ற வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளும் இதை உறுதி செய்கின்றன. விஜயநகர அரசு இருநூறுக்கும் மேற்பட்ட நாயக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் அந்நாயக்குகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, காலாட்படை வீரர்களைப் பராமரித்து தேவைப்படும் நேரத்தில் அரசருக்கு இராணுவச் சேவை செய்ய வற்புறுத்தப்பட்டார்கள் எனவும் நூனிஸ் குறிப்பிடுகின்றார். மேலும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமயங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட அளவு வருவாயை வழங்க வேண்டும். நூனிஸின் கூற்றை ராயவாசகமு என்னும் தெலுங்கு நூல் உறுதிப்படுத்துகிறது. இந்நூல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இம்முறை நடைமுறையில் இருந்ததைக் கூறுகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களின் வம்சாவளிகள் (அவர்களில் பெரும்பாலோர் பழைய நாயக்கர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) இந்நாயக்க முறையானது கிருஷ்ணதேவராயர் காலத்தில் நிறைவு பெற்றது எனக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான நாயக்கர்கள் கன்னடம், தெலுங்கு பேசுபவர்கள். இவர்கள் போர்த்தளபதிகளாகவும் இருந்தனர். உள்ளூர்த் தலைவர்களாகவும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். நாயக்குகள் பிராமண, பிராமணர் அல்லாத பல சாதிகளைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். பிராமணரல்லாத நாயக்குகள் பல்வேறு சமூகப் பின்னணியைக் கொண்டிருந்தனர். போர்புரியும் மரபினைச் சார்ந்தவர்களாகவும், மேய்ச்சல் தொழில் செய்பவர்களாகவும், வனங்களில் வாழும் குலத்தோராகவும் (யாதவர். பில்லமர்). விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர்களாகவும் (ரெட்டி) வணிகர்களாகவும் (பலிஜா) இருந்தனர். கிருஷ்ணதேவராயரிடம் பணிபுரிந்த செல்லப்பா போன்ற மிகச்சிறந்த நாயக்குகள் பிராமணர்கள் ஆவர்.

கிருஷ்ணதேவராயரைப் போன்ற வலிமையான அரசர்கள் இருந்தவரை இம்முறை சிறப்பாகச் செயல்பட்டது. இந்நாயக்குகள் நாயக்தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினர். பேட்டை எனும் வணிக மையங்களை நிறுவினர்.

விவசாயிகளையும் கைவினைஞர்களையும் தங்கள் பகுதிகளில் குடியேற ஊக்குவித்து வரிச் சலுகைகள் வழங்கினர். நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கிப் பராமரித்தனர். அவர்களில் பலர் உயர்மட்டப் பணிகளில் (ஆளுநர், படைத்தளபதி, கணக்கர்) அமர்த்தப்பட்டு அரசரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டனர். தலைக்கோட்டை போருக்குப் பின்னர் பெரும்பாலான நாயக்குகள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் மதுரை, தஞ்சாவூர், இக்கேரி போன்ற நாயக்குகள் வலுவான அரசுகளை உருவாக்கிக் குறுநிலத்தலைவர்களைக் கட்டுப்படுத்தினர். பதினேழாம் நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.

**சமூகமும் பொருளாதாரமும்**

தொடர் போர்களும் அவற்றின் விளைவாக ஏற்பட்ட அளவிலாத் துயரங்களும் தொடக்ககால, இடைக்கால சமூகங்களின் பொதுவான அம்சங்களாகும். பாமினி விஜயநகர் அரசுகளின் காலமும் இதற்கு விதிவிலக்கல்ல. கண்களால் பார்த்த சாட்சியங்களின் குறிப்புகள் அதிக அளவில் கிடைப்பதால் இவ்வம்சம் பெரியதாகவே தெரிகிறது. மற்றொரு முக்கியமான, நூற்றாண்டுகளைக் கடந்து நீடித்திருக்கும் விளைவு மக்கள் இடம் விட்டு இடம் சென்றதும் புலம் பெயர்ந்ததுமாகும். இப்பாடத்தில் நாம் காணும் மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் அனைத்து இடங்களிலும் இதுபோன்ற குடிபெயர்வைக் காணமுடிகிறது. பாமினி அரசவைகளில் நடைபெற்ற மோதல்களுக்குத் தக்காணப் பகுதிகளில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர் ஆகியோர் குடியேறியதே காரணமாயிற்று. விஜயநகரப் பகுதிகளைப் பொறுத்த அளவில் கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களும் அவர்களைச் சேர்ந்தோரும் தமிழகப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் குடியேறினர். பெரும்பாலான நாயக்கத் தலைவர்கள் இவ்விரு மொழியினரே. மற்றொரு முக்கிய விளைவு ஆளும் வர்க்கத்தினருக்கும் ஆட்சி செய்யப்பட்டவர்களுக்கும் இருந்த மிகப் பெரிய இடைவெளியாகும். அனைத்து அயல்நாட்டு பயணிகளும் அரசர்கள், அரசு அதிகாரிகள், சமூகத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள், விஜயநகரம், பீஜப்பூர் போன்ற நகரங்களில் வாழ்ந்தோரின் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் குறிப்பிடும் போதே பெருவாரியான மக்கள் வறுமையில் வாடியதையும் குறிப்பிட்டுள்ளனர். அடிமைமுறை நிலவியதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் மீது வரிவிதிப்பின் மூலமே அரசு வருமானத்தைப் பெற்றது. சங்கம வம்ச அரசர்களின் காலத்தில் விஜயநகரத்தின் ஆட்சி புதிய பகுதிகளுக்குப் பரவியபோது வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டதால் உழைக்கும் மக்கள் கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி 1430இல் தமிழ்நாட்டின் மையப்பகுதிகளில் நடைபெற்றுள்ளது. இக்கிளர்ச்சியில் அடிப்படை உற்பத்தியாளர்கள் தங்கள் சாதி வேறுபாடுகளைப் புறந்தள்ளி ஒன்றுபட்டிருந்தனர். அரசு பிரதானி (ஆளுநர்) அவருடைய படைவீரர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் உட்பட நியாயத்திற்குப் புறம்பாக அதிக வரி கட்டும்படி மக்களை வற்புறுத்தியதன் காரணமான இக்கிளர்ச்சி ஏற்பட்டது. விஜயநகர இளவரசர் இது விஷயத்தில் நேரடியாகத் தலையிட்டு மக்களைச் சமாதானப்படுத்தி வரித் தொகையைக் குறைத்ததாகக் கூறப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வப்போது வரிச்சலுகை வழங்கினர்.

விஜயநகர அரசின் காலத்தில் வேளாண் சாராத கைவினைத் தொழில் உற்பத்தி வியத்தகு வளர்ச்சியை அடைந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பொருளாதாரம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்தது. பணப் பொருளாதாரத்தின் தொடக்கத்தோடு, நாணயப் பணத்தின் பயன்பாடும், அதன் செலாவணியும் பலமடங்காகப் பெருகியது. சமூகத்தில் நெசவு செய்வோர் உலோக வேலை செய்வோர். கட்டடக் கலைஞர்கள் போன்ற கைவினைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வேளாண் அல்லாத பிரிவுகளைச் சார்ந்த பட்டடை அல்லது காஸய - வர்க்கம் என்றழைக்கப்பட்ட இவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர். தமிழகத்தின் வடபகுதி, ராயலசீமை, ஆந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிகமையங்களும் நெசவு மையங்களும் உருவாயின. இயல்பாகவே தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் ஜவுளி முக்கியப் பண்டமாக விளங்கியது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஜவுளி வணிகமானது இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர் மற்றும் ஏனைய ஐரோப்பிய வணிகர்களைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாகும்.

**இலக்கியம்**

விஜயநகர அரசர்கள் இலக்கியத்தின் சிறந்த புரவலர்களாக இருந்தனர். அரசர்கள் வடமொழி (சமஸ்கிருதம்), தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட இலக்கியங்களையும் மொழிகளையும் ஊக்குவித்தனர். கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இலக்கியம் வளர்ச்சியின் உச்சத்தை எட்டியது. கலை மற்றும் இலக்கியத்தின் சிறந்த புரவலராக இருந்த அவர், ஆந்திர போஜா என்று அழைக்கப்பட்டார்.

அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த சமஸ்கிருத அறிஞரான சயானா, வேதங்கள் குறித்த விளக்கவுரைகளை எழுதினார். அந்த விளக்கவுரைகள் இன்றும் தரமான விளக்கவுரைகளாக கருதப்படுகின்றன. அவர் இரண்டாம் ஹரிஹராவின் அமைச்சராக இருந்தார். மாதவச்சார்யா ஒரு பிரபலமான வடமொழி அறிஞர், அவர் விஜயநகர அரச குடும்பத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். புக்கரின் மகன் கம்பனாவின் மனைவியான கங்காதேவி, அக்கால எழுத்தாளர்களில் மிகச் சிறந்தவர். அவர் தனது புகழ்பெற்ற படைப்பான மதுரா விஜயம் எனும் நூலில் தனது கணவர் மதுரையை வென்றதை மகாகாவிய பாணியில் விவரிக்கிறார். அந்த காலத்தில் பிரபல கவிஞர்கள் ஹன்னம்மா மற்றும் திருமலம்மா ஆகியோர் ஆவர். ஹன்னம்மா இரண்டாம் தேவராயரின் அவையில் இருந்த ஒரு பெண் செய்தியாளராவார்.

கிருஷ்ணதேவராயர் தமிழ் அறிஞர்களை ஆதரித்தார். சைவ, வைணவ மற்றும் சமண சமய தமிழ் அறிஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். திருமலைநாதரும் அவரது மகன் பரஞ்ஜோதியாரும் அக்காலத்தில் நன்கு அறியப்பட்ட அறிஞர்கள் ஆவர். சிதம்பரபுராணம் மற்றும் சொக்கநாதருலா ஆகியவை திருமலைநாதரால் எழுதப்பட்டன. சேவ்விட்ச்புதவர் பாகவத புராணத்தை தமிழில் மொழிபெயர்த்தார். வதமலவி அன்னகாலையம், வைஷ்ணவ மதம் குறித்த ஒரு படைப்பான இருசமய விளக்கத்தை எழுதியவர் ஆவார்.

நச்சனா சோமநாதா வடமொழி தெலுங்கு ஆகிய இரண்டு மொழியிலும் புலமை பெற்ற அறிஞராக இருந்தார். ஆயினும், காளிதாசரின் சாகுந்தலத்தின் தெலுங்கு பதிப்பை வசனத்தில் இயற்றிய பிள்ளல் மரி பினா வீராபத்ரா கவி அந்தக் காலத்தில் மிகப் பெரிய கவிஞர் ஆவார்.

முதலாம் தேவராயர் சிறந்த புரவலராக இருந்தார். ஹரவிலாசம் எழுதிய பிரபல தெலுங்கு கவிஞர் ஸ்ரீநாதா அவரது அவையில் இருந்தார்.

கிருஷ்ணதேவராயர் அபினவா போஜா என்றும் அழைக்கப்பட்டார். எட்டு சிறந்த தெலுங்கு கவிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். அவர்கள் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்டனர். அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன் மற்றும் மேலும் பலர் அவரது அவையில் தெலுங்கு கவிஞர்களாக இருந்தனர். மிகச் சிறந்தவரான அல்லசானி பெத்தண்ணா ஆந்திரகவித பிதாமகா என்று வர்ணிக்கப்பட்டார். தெலுங்கில் மனுசரிதத்தை எழுதியவர் அல்லசானி பெத்தண்ணா. கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்த தெனாலிராமன் மிகவும் பிரபலமான அறிஞர் மற்றும் நகைச்சுவையாளர் ஆவார். இவர் பாண்டுரங்க மகாத்மியம் என்ற நூலின் ஆசிரியராவார். கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் அமுக்தமால்யதா எனும் நூலை எழுதினார். இது பெரியாழ்வாரின் மகள் கோதை தேவி (ஆண்டாள்) கதையோடு தொடர்புடையது. அவர் வடமொழி மற்றும் தெலுங்கு மொழி அறிஞராகவும் இருந்தார். உஷா பரிணயம் மற்றும் ஜாம்பாவதி கல்யாணம் ஆகியவை அவரது புகழ்பெற்ற வடமொழி படைப்புகள் ஆகும். கிருஷ்ணதேவராயரின் ஆட்சி தெலுங்கு மொழி இலக்கியத்தின் செவ்வியல் கால கட்டமாகக் கருதப்படுகிறது. எனவே அவர் ஆந்திர பிதாமகா என்று போற்றப்படுகிறார்.

அந்த காலத்தில் கன்னடத்தில் அதிகளவிலான படைப்புகள் உருவாக்கப்பட்டன. பீமா கவி என்பவர் பசவ புராணத்தை கன்னட மொழியில் மொழிபெயர்த்தார். இரண்டாம் ஹரிஹரர் கர்நாடக வித்யவிலாசா என்ற பட்டத்தை பெற்றிருந்தார். ராமாயணத்தின் கன்னட பதிப்பை குமார வெல்மிகி உருவாக்கினார்.

**கலை மற்றும் கட்டடக்கலை**

விஜயநகர அரசர்கள் சிறந்த கட்டட கலையார்வம் கொண்டிருந்தனர். அரண்மனைகள், கோவில்கள், பிரமாண்டமான மண்டபங்கள் (மகாமண்டபம்), கோட்டைகள், கோபுரங்கள், பொது கட்டடங்கள், அணைகள், நீர்நிலைகள் மற்றும் கால்வாய்கள் ஆகியன அக்காலத்தில் கட்டப்பட்டன. தென்னிந்திய கலை மற்றும் கட்டடக்கலை விஜயநகர ஆட்சியின் கீழ் முழுமையை அடைந்தது. விஜயநகர அரசர்கள் திராவிட பாணி எனப்படும்

புதிய கட்டடக்கலை ஒன்றை உருவாக்கினர். விஜயநகர கட்டடக்கலையின் பண்புகள் உயரமான ராயகோபுரங்கள் அல்லது நுழைவாயில்கள் மற்றும் கல்யாண மண்டபம் ஆகியவை ஆகும். தூண்களில் உள்ள சிற்பங்கள் தனித்துவமான அம்சங்களுடன் செதுக்கப்பட்டன. தூண்களில் சித்தரிக்கப்பட்ட மிகவும் பொதுவான விலங்கு குதிரை ஆகும். பெரிய மண்டபங்களில் நூறு தூண்களும் சில பெரிய கோவில்களில் ஆயிரம் தூண்களும் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. கல்யாண மண்டபத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு வேலூர் மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜ சுவாமி, ஏகம்பரநாத கோவில்களும், திருச்சிராப்பள்ளியில் உள்ள ஜம்புகேஸ்வரர் கோவிலும் உள்ள மண்டபங்கள் ஆகும்.

விஜயநகர மன்னர்களின் காலத்தில் ஹம்பி, சிருங்கேரி, திருப்பதி, காளஹஸ்தி, நந்தி, கோலார், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் கோவில்கள் கட்டப்பட்டன. கோவில் கட்டடக்கலையில் புதிய கூறுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதுதவிர, பிரதான சன்னதிக்கு வடமேற்கில் அம்மன்

ஆலயம் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய கோவில் தேவிக்காக கட்டப்பட்டது. இது பிற்கால சோழர் காலத்தில் தொடங்கிய இந்த முறையானது இப்போது நடைமுறையாகிவிட்டது.

அரசரின் அரண்மனையானது நகரத்தில் மிகவும் கவனத்தை கவர்கின்ற கட்டடமாக இருந்தது. மற்ற அம்சங்கள் குறிப்பாக விஜயநகர் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட தென்னிந்திய கோவில்களின் தனித்துவமான அம்சமான கோபுரங்கள் என்று அழைக்கப்படும் உயரமான நுழைவாயில்கள் ஆகும். திருவண்ணாமலை மற்றும் சிதம்பரத்தில் உள்ள ராயகோபுரங்கள் விஜயநகரின் புகழ்பெற்ற சகாப்தத்தைப் பேசுகின்றன. அவை பிற்காலத்தில் நாயக்கர் ஆட்சியாளர்களால் தொடரப்பட்டன.

விஜயநகரத்தின் மிகச்சிறந்த கோவில்கள் உலக பாரம்பரிய நகரமான ஹம்பியில் உள்ளன. அவர்களின் தலைநகரான விஜயநகர், துங்கபத்ரா ஆற்றின் தென் கரையில் இருந்தது. தலைக்கோட்டை (பொ.ஆ.1565) போருக்குப் பிறகு, அந்த அற்புதமான நகரம் வெற்றியாளர்களின் கோபத்திற்கு உள்ளாகி சொல்லமுடியாத அழிவையும் சிதைவையும் சந்தித்தது. விஜயநகர ஆட்சியாளர்களின் கட்டடக்கலை சாதனைகள் மற்றும் ஹம்பியின் இடிபாடுகள் ஆகியவற்றை வெளிநாட்டு பயணிகளான நிக்கோலோ கோண்டி மற்றும் அப்துர்ரசாக் ஆகியோரின் குறிப்புகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. கோவில் கட்டடக்கலையில் ஒற்றைக்கல் தூண்கள், அலங்கரிக்கப்பட்ட கையணிகள் மற்றும் சுவர்களின் வெளிப்புறத்தில் செய்யப்பட்ட அலங்காரம் ஆகியவை விஜயநகர பாணியின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

கிருஷ்ணதேவராயர் ஒரு சிறந்த கட்டடக்கலை நிபுணர் ஆவார். அவர் தனது தாயார் நாகம்பாவின் நினைவாக நாகலாபுரம் (விஜயநகருக்கு அருகில்) என்ற நகரை நிறுவினார். மேலும் பேரரசின் பல்வேறு பகுதிகளில் நீர்நிலைகள், கோபுரங்கள் மற்றும் கோவில்களைக் கட்டினார். இவற்றில் மிகவும் பிரபலமானது விட்டலசாமி கோவில் மற்றும் விருபாக்ஷா கோவில்கள் ஆகும். கிருஷ்ணதேவராயரின் ஆட்சியில் கட்டப்பட்ட புகழ்பெற்ற ஹசாரா கோவிலை இந்து கட்டடக்கலையில் முழு நிறைவு வாய்ந்த ஓர் எடுத்துக்காட்டாகும் என்று லாங்ஹர்ஸ்ட் குறிப்பிடுகிறார். விட்டலசாமி கோவில் விஜயநகர பாணிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். ஃபெர்குஸன் என்பவர், இது கட்டடக்கலைப்பாணி மிகுந்த பேரழகுடன் முன்னேறியிருந்ததன் முழு எல்லையைக் காட்டுகிறது என்கிறார். விட்டலசாமி கோவிலில் உள்ள சப்தஸ்வர இசை தூண்கள் மற்றும் கல் தேர் ஆகியவை கட்டடக்கலையின் சில அதிசயங்கள் ஆகும்.

வீரபத்ரா கோவில் மற்றும் லெபாக்ட்சி கோவிலில் உள்ள ஓவியங்கள் விஜயநகர ஓவியர்களின் தனிச்சிறப்பை வெளிப்படுத்துகின்றன. விஜயநகர அரசர்கள் இராமாயண மற்றும் மகாபாரதக் கதைகளை பல்வேறு கோவில்களின் சுவர்களில் பொறித்தனர். விஜயநகர மன்னர்கள் இசை, நடனம், நாடகம், யக்ஷகானா போன்ற நுண்கலைகளுக்கு ஆதரவளித்தனர். அரண்மனை மற்றும் கோவில்களில் கலைஞர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டனர். நரசிம்மர், கிருஷ்ணதேவராயர் மற்றும் அவரது இரண்டு ராணிகளின் இயல்புருவ அளவு உருவப்படங்கள் விஜயநகர கலையின் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். ஓவியம் ஒரு கலையாக வெளிப்பட்டதை விஜயநகர பேரரசின் கோவில் சுவர்களில் காணலாம். விருபாக்ஷா

கோவிலில் காணப்படும் தசவதராக் காட்சிகள் மற்றும் கிரிஜாகல்யாணம் போன்ற சுவர் ஓவியங்கள் அழகிய கலை மாதிரிகள் ஆகும்.

## 2. Mughals – Babur-Humayun

**முகலாயப் பேரரசு**

டெல்லி சுல்தானிய பாரம்பரியத்தில் கடைசி மரபான லோடி வம்சம் டெல்லி சிம்மாசனத்தை ஆட்சி செய்தபோது, அரசும் வலுவிழுந்திருந்தும், பொருளாதாரம் செழிப்பற்றும் இருந்தது. பல்வேறு அரசுகள் கோலோட்சின, பகைமை உணர்வு வளர்ந்திருந்தது. சமுதாய ஒருங்கிணைப்பு இல்லை. இவ்வாறு முகலாய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் நிறுவ சூழ்நிலைகள் சாதகமாக இருந்தன. டெல்லி சுல்தானிய அரசுகள் போல் இல்லாமல் பாபர் நிறுவிய முகலாய அரசு ஒரே வம்சத்தை சார்ந்ததாகும். டெல்லி சுல்தானியத்தை விட இவ்வரசு நிர்வாகச் சிறப்புகள் மற்றும் கலை படைப்புகளுக்கு பெயர் பெற்றது. ஷெர்ஷா சூர் வம்சத்தை சார்ந்தவர் என்ற போதிலும் முகலாய வம்சத்தின் இடையூடே ஆட்சி செய்ததால் முகலாய வரலாற்றோடு அவரையும் இணைத்துக் கொள்வது மரபாக உள்ளது. அடிப்படையில் ஷெர்ஷா ஒரு மிகச் சிறந்த நிர்வாகியாகவும், அக்பர் மிகச் சிறந்த மதச் சீர்த்திருத்தவாதியாகவும், ஷாஜகான் கலையார்வம் மிக்கவராகவும் விளங்கினர். ஔரங்கசீப்பின் போர்க் கொள்கைகளும், மதக் கொள்கையும் முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு பெரிதும் வித்திட்டன.

**<u>பாபர் (1526-1530)</u>**

ஜாகீர் உத்தீன் முகம்மது என்ற பெயர் கொண்ட பாபர் 1483ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தேதி மத்திய ஆசியாவிலுள்ள ஒரு மாகாணமாகிய பர்கானாவில் பிறந்தார். இவரது தந்தை உமர்ஷேக்மீர்ஷா என்பவர் துருக்கிய வீரன் தைமூரின் வழி வந்தவன். இவரது தாய் மங்கோலியத் தலைவர் செங்கிஸ்கானின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு பாபர் செங்கிஸ்கான் தைமூர் போன்ற இரத்த வெறியர்களின் வழிதோன்றலாகக் கருதப்பட்டார். இவரது பெருந்துணிவின் காரணமாகவே புலி என்று பொருள்படும் பாபர் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தார்.

1505ல் தான் பாபரின் முதல் இந்தியப் படையெடுப்பு நடந்தது. இரண்டாவது படையெடுப்பு 1507ல் நடைபெற்றது. அப்போதுதான் அவர் காபூலைக் கைப்பற்றினார். 1519ல் தனது மூன்றாவது இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டு பஜௌர் என்ற இடத்தையும் ஜீலம் நதிக்கரையிலுள்ள பேரா என்ற இடத்தையும் கைப்பற்றினார்.

1524ல் தௌலத்கான் லோடியின் அழைப்பிற்கிணங்கி பாபர் நான்காவது முறையாக இந்தியாவின் மீது படையெடுத்தார். லாகூரைக் கைப்பற்றிக் கொண்டு தௌலத்கான் விரும்பாத சில ஏற்பாடுகளை செய்துவிட்டு காபூல் திரும்பினார்.

பாபரின் ஐந்தாவதும் இறுதியானதுமான இந்தியப் படையெடுப்பு 1525ல் நிகழ்ந்தது. அது அதற்கு முந்தைய படையெடுப்புகளின் தொடர்ச்சி என்றே கூற வேண்டும். அத்தருணத்தில்

மத்திய ஆசியாவில் பாபரின் பேராசை நிறைவேறாததால் அவர் மனம் உடைந்திருந்தார். எனவே இந்தியப் படையெடுப்பை மிக ஆர்வத்துடன் மேற்கொண்டார். பாபரின் வெற்றிகள்

**முதலாம் பானிபட் போர் - 1526 ஏப்ரல் 21**

இந்தியாவிலுள்ள அரசியல் சூழ்நிலையை நாம் அறிவோம். டில்லியிலுள்ள பிரபுக்கள் பேராசையாலும், பழிவாங்கும் உணர்ச்சியாலும் டில்லி சுல்தானியத்திற்கு எதிராகக் கிளம்பினர். அவர்களுள் பஞ்சாபின் பலம் வாய்ந்த கவர்னரான தௌலத்கான் லோடி பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு அழைத்தார். மற்றும் இப்ராகிம் லோடியின் மாமனான ஆலம்கானும் டில்லி அரியணையைக் கைப்பற்ற பாபரின் உதவியை நாடினார். இவ்வாறு தங்களுக்குள் பிணக்கு கொண்ட ஒரு கூட்டத்தினர் இந்தியாவின் மீது படையெடுக்குமாறு பாபரை அழைத்த போது பாபர் அதனை ஓர் நல்வாய்ப்பாகக் கருதி இந்தியாவின் மீது படையெடுத்தார்.

1525ல் பாபர் தனது ஐந்தாவதும் இறுதியுமான இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டார். அப்போது அவருக்கு வயது 43. ஒழுக்கமும், கட்டுப்பாடும், நல்ல பயிற்சியும் பெற்ற 12,000 வீரர்களைக் கொண்ட படையுடன் 1525 நவம்பர் மாதம் காபூலிலிருந்து புறப்பட்டார் பாபர். வழியில் பாடக்ஷன் பகுதியின் தலைவராக இருந்த தனது மகன் ஹூமாயூனையும் அழைத்துக் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தார். முதலில் பஞ்சாபை வென்று தௌலத்கான் லோடியைப் பணியும்படி செய்தார். பிறகு டில்லியை வென்று அதன் அரியணையில் அமர்ந்திருந்த இப்ராகிம் லோடியை விரட்ட எண்ணிய பாபர் தனது பெரும்படையுடன் டில்லியை நோக்கி விரைந்தார். போரின் போக்கு

பாபரின் படையெடுப்பை அறிந்த இப்ராகிம்லோடி ஒரு இலட்சம் போர் வீரர்களைக் கொண்ட ஓர் படையைத் திரட்டினார். 1526 ஏப்ரல் மாதம் 21ம் தேதி இருவரது படைகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க பானிபட் சமவெளியில் சந்தித்தன. பாபர் மிகச் சிறந்த பீரங்கிப்படை வைத்திருந்தார். மேலும் அவரது படைகள் அனுபவமும் திறமையும் மிக்க ஆட்டோமான் வல்லுநர்களான உஸ்தாத் அலி, முஸ்தாபா ஆகியோரின் தலைமையில் இயங்கியது.

போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. பாபரின் படைத் தந்திரங்களாலும், ஒப்பற்ற தலைமையினாலும் இப்ராகிமின் படைகள் தோற்கடிக்கப்பட்டது. பாபரின் பீரங்கிப்படைத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் லோடியின் படைகள் அங்குமிங்கும் ஓடி சிதறின. போர் காலை ஒன்பது மணியிலிருந்து நண்பகல் பன்னிரெண்டு மணி வரை தான் நடந்தது. போரில் இப்ராகிம் லோடியை முழுமையாக முறியடித்தார் பாபர். கடைசி வரை வீரமாகப் போராடிய இப்ராகிம் லோடி போர்க்களத்திலேயே கொல்லப்பட்டார். பாபரின் குதிரைப் படையும், பீரங்கிப்படையும் அவரது வெற்றிக்குச் சிறப்பான காரணங்களாகும். ஆனால் இப்ராகிம் லோடியோ பாபர் கூறுவது போல், அனுபவமில்லாத மனிதராகவும், படை இயக்கங்களில் போதிய கவனம் இல்லாதவராகவும், ஒழுங்கின்றி படைகளை நடத்திச் சென்று, முன் யோசனையின்றி போரில் ஈடுபட்டார்.

பானிபட்போரில் பாபர் தனது வெற்றியைப் பற்றிக் குறிப்பிடும் போது எல்லாம் வல்ல கடவுளின் கருணையாலும் அருளாலும் இந்த கடுமையான செயல் எனக்கு எளிதாகப் போயிற்று. அந்த மாபெரும் படை அரை நாளில் மண்ணைக் கவ்வியது என்று எழுதியுள்ளார்.

பானிபட் வெற்றிக்குப் பின்னர் உடனேயே டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார் பாபர். வரலாற்றாசிரியர் ஈஸ்வரி பிரசாத் கூற்றுப்படி, பானிபட் போர் டில்லிப் பேராசை பாபரின் கரங்களில் வழங்கியது!

**பானிபட் போரின் விளைவுகள்**

லோடி வம்சத்தின் அரசியல் அதிகாரம் அகற்றப்பட்டது. இப்ராகிம் லோடியும் அவரது படைவீரர்கள் 15000 பேர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டனர். ஆப்கானிய லோடி அரசாட்சி வீழ்ச்சியடைந்து, இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. டில்லி அரியணை பாபருக்குக் கிடைத்தது. இந்திய வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது. பானிபட் வெற்றி பாபரை டில்லிக்கும் ஆக்ராவிற்கும் மன்னராக்கியதே தவிர இந்தியாவின் மன்னராக்கவில்லை. இப்ராகிம் லோடியின் தோல்வி இந்தியாவின் தோல்வியல்ல. இந்த பானிபட் வெற்றிக்கு பிறகு தான் பாபரின் முக்கிய வேலை தொடங்கியது என்று கூறலாம். ஏனெனில் இப்போருக்குப் பின்னரே ஒரு பெரிய முகலாயப் பேரரசை நிறுவ வேண்டுமென எண்ணினார் பாபர். ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றச் செல்லும் பாதையில் பாபர் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

**கானுவாப் போர் - 1527 மார்ச் 16**

சித்தூரைத் தலைநகராகக் கொண்டு மேவாரில் சக்தி வாய்ந்த இரஜபுத்திரப் பேரரசை உருவாக்கியவர் ராணாசங்கா. இப்ராகிம் லோடியை விடப் பலமடங்கு வீரமும், வலிமையும், திறமையும் பெற்றவர். எனவே இவரது தலைமையில், ரஜபுத்திரர்கள் மற்றொரு வெளிநாட்டு ஆட்சி திணிக்கப்படுவதாகக் கருதி ஒன்று திரண்டனர். பானிபட் போருக்குப் பின்னர் பாபர் மத்திய ஆசியா திரும்பிவிடுவார் என்று ராணாசங்கா எண்ணினார். ஆனால் பாபர் மேலும் மேலும் நாடுகளைக் கைப்பற்றி முகாலயப் பேரரசை இந்தியாவில் நிலைநாட்ட திட்டமிட்டதைக் கண்ட ராணா பாபரைத் தோற்கடித்து விரட்ட எண்ணினார்.

எனவே 120 படைத்தலைவர்களுடன் 80 ஆயிரம் குதிரைகள், 500 யானைகளுடன் ஒரு பெரும் படையைத் திரட்டினார் ராணா சங்கா. ஆஜ்மீர், சந்தேரி, மார்வார் முதலிய நாடுகளின் அரசர்களும் ராணாவுடன் சேர்ந்து கொண்டார்கள். இரஜபுத்திரர்களின் வீரத்தை அறிந்த பாபரின் படைகள் அச்சமும் நடுக்கமும் அடைந்தன. காபூல் திரும்ப விரும்பினார். ஆனால் பாபர் சிறிதும் மனம் கலங்கவில்லை. பயம் கொண்டிருந்த தனது படையினருக்கு ஊக்கம் ஊட்டினார். விலை உயர்ந்த மதுக்கிண்ணங்களை உடைத்தெறிந்து இனி மது அருந்துவதில்லை என்று சபதம் செய்தார். வீரர்களிடையே சொற்பொழிவாற்றி அவர்களுக்கு வீர உணர்ச்சியை ஊட்டினார். இதனால் கவரப்பட்ட வீரர்கள் பாபருக்காகத் தொடர்ந்து போர்புரிய குர்-ஆன் மீது சபதம் செய்தனர்.

1527 மார்ச் 16ம் தேதி ஆக்ராவுக்கு 57 கி.மீ. தூரத்தில் கானுவா என்ற இடத்தில் போர் நடைபெற்றது. இப்போரிலும் பாபரின் பீரங்கிப் படை பெரிதும் உதவியது. மேலும் ரெய்சின் முஸ்லீம் அரசர் சிதரடி என்பவர் கடைசி நேரத்தில் ராஜபுத்திரர்களிடமிருந்து விலகி பாபருடன் சேர்ந்து கொண்டார். பாபர் கையாண்ட துலுகமா என்ற புதிய உஸ்பெக் போர் முறையும் அவரது வெற்றிக்கு வழிவகுத்தது.

இரஜபுத்திர வீரர்கள் மிக்க வீரத்துடன் போரிட்டனர். பத்து மணி நேரம் நடந்த கடுமையான சண்டைக்குப் பிறகு ரஜபுத்திரர்கள் தோற்கடிக்கப்பட்டு சிதறி ஓடினர். பாபர் வெற்றி அடைந்தார். ராணா தப்பி ஓடிவிட்டார். போர்களத்திலேயே காசி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார் பாபர்.

**கானுவாப் போரின் விளைவுகள்**

இந்திய வரலாற்றின் போக்கினைத் திருப்பிய போர்களுள் கானுவாப் போரும் ஒன்றாகும். பானிபட் போரை விட இப்போர் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. பானிபட் போர் முழு ஆட்சி அதிகாரத்தை உண்மையில் செலுத்த முடியாமல் பேருக்கு மட்டும் சுல்தானாக இருந்த டில்லி சுல்தானின் தோல்வியைக் காட்டுகிறது. ஆனால் கானுவாப் போர் வலிமைமிக்க ரஜபுத்திரர்களின் கூட்டுப் படையின் தோல்வியைக் காட்டுகிறது. இந்த போரில் ஏற்பட்ட ராஜபுத்திரர்களின் தோல்வி, இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சியை நிலைநாட்ட பாபருக்குத் துணைபுரிந்தது. கானுவாப் போருக்குப் பின் டில்லி அரியணைக்குத் தீங்கு ஏற்படும் என்றோ அல்லது அதை உயிரைப் பணயம் வைத்து மீட்க வேண்டும் என்றோ அஞ்ச வேண்டிய தேவையில்லாமல் போயிற்று. இவ்வாறாக காபூலிலிருந்து இந்துஸ்தானத்திற்கு பாபரின் அதிகாரவன்மை மாறியது. பானிபட் போர் பாபரை டில்லியின் மன்னராக மட்டும் தான் உயர்த்தியது. ஆனால் கானுவா வெற்றியோ அவரை இந்துஸ்தானத்தில் மன்னராக மேலும் உயர்வடையச் செய்தது.

**சந்தேரிப் போர் - 1528 ஜூன் 28**

அடுத்து பாபர் தனது கவனத்தை மாளவத்திலுள்ள சந்தேரி மீது செலுத்தினார். சந்தேரி கோட்டை முற்றுகையிடப்பட்டது. இரஜபுத்திரர்கள் தங்கள் தலைவன் மேதினிராய் தலைமையில் ஒன்று திரண்டனர். தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டனர். ஆனாலும் சந்தேரிக் கோட்டையை அவர்களால் காக்க முடியவில்லை. கோட்டையை எளிதில் கைப்பற்றிய பாபர் இரஜபுத்திரர்களை ஈவு இரக்கமற்று கொன்று அவர்களது தலைகளை மலை உச்சியின் மீது கோபுரமாகக் குவித்தார். பாபரின் கூற்றுப்படி, மிகுந்த படைகள் இல்லாமலும், படைபலத்தை முழுமையாகக் காட்டாமலும் வெற்றியடைந்தார்.

**கோக்ரா போர் - 1529, மார்ச் 6**

இரஜபுத்திரர்களை வென்று வெற்றியவாகை சூடிய பாபர் இப்போது ஆப்கானியரின் எதிர்ப்பைச் சமாளிக்கத் தயாரானார். வங்காளத்திலும், பீகாரிலும் ஆப்கானியர் வலிமையுடன் இருப்பதை அறிந்தார் பாபர். இப்ராகிம் லோடியின் சகோதரரான முகமது லோடியின் தலைமையில் ஆப்கானியர் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். வங்காள மன்னர் நசரத்ஷாவும் லோடியுடன் சேர்ந்து கொண்டார். 1529 மார்ச் 6ம் தேதி கங்கையும் கோக்ரா நதியும் கூடும் இடம் அருகே கோக்ரா நதிக்கரையில் இரண்டு படைகளும் மோதின. இப்போரில் ஆப்கான்கள் படுதோல்வியடைந்தனர். லோடி வம்சத்தாரின் இறுதி நம்பிக்கை அடியோடு அழிந்தது. இப்போரின் விளைவாக கங்கை நதி வரையிலுள்ள பீகார் முழுவதும் பாபரின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆக்ரா போர் இந்திய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. வருங்காலத்தில் முகலாயர்கள் தான் இந்தியாவில் தலை தூக்கி நிற்க வேண்டியவர்கள் என்பதை இப்போர் திட்டவட்டமாக நிர்ணயித்துவிட்டது.

**பாபர் பேரரசின் பரப்பு**

இவ்வாறு பாபர் பானிபட் போர், கானுவாப் போர், கோக்ராப் போர் ஆகிய மூன்று முக்கிய போர்களை நடத்தி வடஇந்திய ஆக்சஸ் நதியிலிருந்து வங்காள எல்லை வரையிலும், இமயமலையிலிருந்து குவாலியர் வரையிலுமான பரந்த பேரரசுக்குத் தலைவரானார். இவரது பேரரசில் பஞ்சாப், வங்காளம், குவாலியர், இரஜபுதனத்தின் பெரும்பகுதி ஆகியவை அடங்கி இருந்தது. பாபர் ஆக்ராவைத் தனது தலைநகராக்கினார். இந்தியாவுக்கு வெளியே அவரது அரசு காபூல், காந்தகார், பாடக்ஷன் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

**பாபரின் மரணம்**

பாபர் தாம் அரும்பாடுபட்டு பெற்ற வெற்றிகளின் பலன்களை அனுபவிக்க முடியாதபடி அவரது மரணம் குறுக்கிட்டது. 1530 டிசம்பர் 26ம் தேதி தனது 48ம் வயதில் பாபர் இறந்தார். முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் பாபரின் மரணத்தைப் பற்றிச் சுவையான செய்தியைப் பிணைத்துக் கூறுகிறார்கள். நோய்வாய்பட்டிருந்த தனது மகன் ஹூமாயூனைக் காப்பாற்ற கடவுளிடம் வேண்டி, அதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தார் என்று கூறப்படுகிறது. மற்றொரு கருத்து பாபர் இப்ராகிம் லோடியின் தாயால் விஷம் வைத்து கொல்லப்பட்டார் என்பதாகும். முதலில் அவரது உடல் ஆக்ராவிலுள்ள ராம்பாக்கில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் காபூலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவருக்கு மிக விருப்பமுடைய தோட்டம் ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் பளிங்குக் கல்லறையை பின்னர் ஷாஜகான் எழுப்பினார்.

இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவி இந்திய வரலாற்றில் நிலையான புகழைத் தேடிக்கொண்டார் பாபர். அவர் பல திறமைகளைப் பெற்றிருந்தார். பாபரின் வீரத்திற்கும், அஞ்சாநெஞ்சத்திற்கும் அவரது வெற்றிகள் நற்சான்று கூறுகின்றன. பாபர் திறமையான வீரர், தளகர்த்தர், குதிரை ஏற்றத்தில் வல்லவர். தோல்விகளையும் துர்அதிர்ஷ்டங்களையும் கண்டு அஞ்சாதவர்.

அன்புமிக்க ஒரு தந்தையாகவும், அன்புள்ள ஒரு தலைவராகவும், தாராளமாக உதவும் நண்பராகவும், கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவராகவும், உண்மை, இயற்கை இவைகளின் சிறந்த காதலராகவும் இருந்தார். இசை முதலிய கலைகளில் வல்லவராக இருந்தார். துருக்கிய பாரசீக மொழிகளை நன்கு கற்றறிந்தவர். கவிதை புனையும் ஆற்றல் அவருக்கு உண்டு. துருக்கிய மொழியில் அவர் எழுதிய திவானி பாபர் என்ற பாடல் தொகுப்பு சிறப்பு வாய்ந்தது. துருக்கிய மொழியில் அவர் எழுதிய பாபர் நாமா (துசுகி பாபரி ) என்ற அவரது சுயசரிதை , மிகச்சிறந்த நூலாகும். அவை உண்மை நிறைந்தவை. ஒரு பேரரசர், சிறந்த வெற்றி வீரராகவும், சிறந்த கவிஞராகவும் விளங்கும் எடுத்துக்காட்டுகள் வரலாற்றில் மிகவும் குறைவு.

பாபர் இந்தியாவில் பல வெற்றிகளைப் பெற்றாரே தவிர தான் வென்ற பகுதிகளில் நிலையான அரசை ஏற்படுத்தவில்லை. போரிலும், அரசியலிலும் ஆழ்ந்துவிட்ட காரணத்தினால் ஆட்சி முறையில் போதுமான கவனம் செலுத்தவில்லை. நீதித்துறையிலும், நிலச் சீர்திருத்தத்திலும் பாபர் எந்தவிதமான சீர்திருத்தமும் செய்யவில்லை. அவர் காலத்தில் புதிய சட்டங்கள் ஒன்றும் உண்டாக்கப்படவில்லை. அவரால் ஒரு வலிமை வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. பொது நிலையங்கள், அறநிலையங்கள் ஏதும்

ஏற்படுத்தவில்லை. பாபர் செய்து முடித்த செயல்களைவிட செய்து முடிக்கப் பெறாத செயல்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறப்படுகிறது.

எனினும் பாபர் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார். ஏனெனில் அவரது புகழ்பெற்ற பேரனான அக்பரால் மிக விரைவில் கட்டப்பட்ட முகலாயப் பேரரசு என்னும் கட்டிடத்தை இந்தியாவில் எழுப்புவதற்கு அடிக்கல் நாட்டிய பெருமை பாபரையே சாரும்.

**ஹூமாயூன் (1530-1556)**

பாபர் இறந்த பின்னர் அவரது மூத்த மகனான ஹூமாயூன் முகலாயப் பேரரசராக கி.பி. 1530, டிசம்பர் 29ம் தேதி பதவி ஏற்றார். அப்போது ஹூமாயூனுக்கு வயது 23 ஆகும். ஹூமாயூன் என்ற பெயருக்கு அதிர்ஷ்டம் உள்ளவன் என்று பொருள்படும். ஹூமாயூன் கி.பி. 1508ல் காபூலில் மகிம் பேகம் என்ற ஷியா பிரிவைச் சேர்ந்த பெண்ணுக்கும் பாபருக்கும் மகனாகப் பிறந்தார். இளம் வயதில் ஹூமாயூன் அராபிக், பாரசீகம் ஆகிய மொழிகளைக் கற்று கணிதம், வான சாஸ்திரம், தத்துவம், ஜோதிடக்கலை ஆகியவற்றை அறிந்து வைத்திருந்தார். தனது தந்தையுடன் சேர்ந்து பல போர்க்களங்களைக் கண்டு போர் பயிற்சியும் பெற்றிருந்தார்.

ஆனால் ஹூமாயூன் பேரரசரானபோது இருந்த சூழ்நிலையில் படைத்துறையில் பேரறிவும், அரசியல் சூழ்ச்சித் திறனும், அரசியல் ஞானமும் உடைய ஒர் ஆட்சியாளரே நாட்டிற்குத் தேவைப்பட்டார். ஹூமாயூன் இவற்றில் ஒன்றையும் பெற்றிருக்கவில்லை. பாபரிடம் காணப்பட்ட ஞானமும், ஆராயுந்திறனும், வலிமையான மன உறுதிப்பாடும், இடைவிடா ஊக்கமும் ஹூமாயூன் பெற்றிருக்கவில்லை. எனவே தான் ஆப்கானிய இனத்தின் சூர்வம்சத்தைச் சார்ந்த ஷெர்கான் சூர் என்பவர் ஹூமாயூனைத் தோற்கடித்து 1540ல் டில்லி அரியணையில் அமர்ந்தார். 1540 முதல் 1555 வரை நாடோடியாகத் திரிந்த ஹூமாயூன் தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டு 1555ல் இரண்டாம் முறையாக டில்லியைக் கைப்பற்றி ஆட்சியிலமர்ந்தார்.

**ஹூமாயூனுக்கு இருந்த இடையூறுகள்**

பாபர் இறந்த போது ஹூமாயூன் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. பாபர் இறப்பதற்கு முன்பே அவரது மைத்துனரான மாதிகுவாஜா என்பவரை சிம்மாசனத்தில் அமர்த்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனவே பாபர் இறந்த பிறகு மூன்று நாட்கள் குழப்பமான நிலையே காணப்பட்டது. ஆனாலும் சூழ்ச்சிகளை முறியடித்து பாபர் இறந்த மூன்று நாட்கள் கழித்து ஹூமாயூன் அரியணை ஏறினார். இவ்வாறு வாரிசுரிமையின்படி ஹூமாயூனுக்கு கிடைத்த அரியணை ரோஜா மலர்களால் அமைக்கப்படவில்லை. முட்கள் நிறைந்த ஒரு அரியணையாகவே காணப்பட்டது. ஹூமாயூன் கீழ்க்கண்ட பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. உறுதியற்ற முகலாய அரசு

பாபர் பஞ்சாப், மூல்தான், பீஹார், டில்லி, ஆக்ரா போன்ற பகுதிகளை வென்று தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தபோதிலும் தனது நாட்களை போர் புரிந்து நாடுகளைக் கைப்பற்றுவதிலேயே கழித்த காரணத்தினால் தான் வென்ற பகுதிகளில் நிலையான, உறுதியான ஆட்சியை ஏற்படுத்த முடியவில்லை. இவ்விதமாக ஸ்திரப்படுத்தப்படாத,

ஒழுங்குப்படுத்தப்படாத ஒரு அரசையே பாபரின் மரணத்திற்குப் பிறகு ஹுமாயூன் ஆட்சி செய்ய வேண்டியிருந்தது. இப்படி குழப்பிக் காணப்பட்ட அரசில் ஹுமாயூன் பல பகைமைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிற்றரசர்கள் பலர் அவருக்கு எதிரிகளாக இருந்தனர். ஹுமாயூன் அவர்களுக்கு ஓர் அந்நியராகவே காட்சியளித்தார்.

**ஹுமாயூனின் படையெடுப்புகள்**

**கலிஞ்சார் படையெடுப்பு - 1531**

கி.பி.1531ல் ஹுமாயூன் பந்தல் கண்டிலுள்ள கலிஞ்சார் கோட்டை மீது படையெடுத்தார். ஏனெனில் அந்தக் கோட்டையின் ராஜா ஆப்கானியங்களுக்கு உதவி செய்து வந்தார். முற்றுகை பல மாதங்கள் நீடித்தது. ஆனால் விரைவில் அந்த ராஜாவுடன் சமாதானம் செய்து கொண்டு ஒரு பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்றுக் கொண்டார். இது ஹுமாயூன் செய்த ஒரு முட்டாள்தனமான செயல் என்றே மதிப்பிடப்படுகிறது. ஏனெனில் ஹுமாயூன் பந்தல் கண்ட் ராஜாவைத் தோற்கடிக்க முடியாததாலும், தனது முயற்சியில் தோல்வியடைய நேரிடும் எனக் கருதியே ஹுமாயூன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

**சூனார் படையெடுப்பு**

முகம்து லோடியின் கீழ் ஒன்றுபட்ட ஆப்கானியர்களைத் தோற்கடித்த பின்னர் ஹுமாயூன் ஆப்காகனியத் தலைவர்களுள் ஒருவரான ஷெர்கான் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்த சூனார் கோட்டையை முற்றுகையிட்டார். இந்த முற்றுகையானது 1532ம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை நீடித்தது. ஆனால் ஷெர்கான கீழ்ப்படிந்துவிட்டதாகக் கூறிய வெறும் வார்த்தையை ஏற்றுக்கொண்டு அவரோடு சமரசம் செய்து கொண்டு முற்றுகையை கைவிட்டுவிட்டு குஜராத்தை ஆண்ட பகதூர்ஷாவை அடக்க சென்றுவிட்டார். உதய நட்சத்திரம் போல வளர்ந்து வந்த ஷெர்கானை ஆரம்பத்திலேயே அடக்காமல் விட்டுவிட்டது ஹுமாயூன் செய்த பெருந்தவறாகும். ஷெர்கானை அப்போதே ஒழித்துக் கட்டியிருக்க வேண்டும். இந்த ஷெர்கான் தான் ஹுமாயூனைப் பின்னர் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினார். சூனார் முற்றுகையிலிருந்து திரும்பி ஹுமாயூன் சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ஆக்ராவிலும், டில்லியிலும் கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் வீணாகக் கழித்தார். இந்த சமயத்தில் தான் குஜராத்தில் பகதூர்ஷா தன்னை நன்கு பலப்படுத்திக்கொண்டார்.

**பகதூர்ஷாவுடன் போர் - 1535-36**

குஜரத்தை ஆண்ட பகதூர்ஷா என்பவர் 1531ல் மாளவத்தைத் தனது அரசுடன் இணைத்துக் கொண்டார். பேராசை கொண்ட அவர் இந்தியாவின் சக்ரவர்த்தி ஆக வேண்டும் என்று ஆசை கொண்டு நாடு பிடிக்கும் செயலில் ஈடுபட்டார் ஹுமாயூனின் எதிரியான முகமது சாமான் மிர்ஷா என்பவருக்கும் தஞ்சம் அளித்தார். எனவே ஹுமாயூன் பகதூர்ஷாவை ஒழித்துக் கட்ட விரும்பினார்.

ஹுமாயூன் தனது படையுடன் வந்த போது பகதூர்ஷா ரஜபுத்திரக் கோட்டையான சித்தூரை முற்றுகையிட்டிருந்தார். எனவே அதன் அரசியான ராணி கர்ணாவதி ஹுமாயூனுக்கு ஒரு தூதுவரை அனுப்பி தான் ஹுமாயூனை ஒரு சகோதரராகக் கருதுவதாகவும் அவரது

உதவியை நாடுவதாகவும் தெரிவிதர்தார். ஆனால் ஹுமாயூன் பெருந்தன்மையில்லாமல் நடந்து கொண்டார். உதவி செய்ய முன்வரவில்லை. இது ஹுமாயூனின் ராஜதந்திரமற்ற செயல் என்று கருதப்படுகிறது. ஏனெனில் அப்போதே ரஜபுத்திரர்களுடன் சேர்ந்து கொண்டு பகதூர்ஷா மீது படையெடுத்திருந்தால், பகதூர்ஷாவை முழுமையாகத் தோற்கடித்திருக்க முடியும். அத்துடன் ரஜபுத்திரர்களுடன் உதவி செய்யாததால் ரஜபுத்திரர்களின் எதிர்ப்பையும் ஹுமாயூன் சம்பாதித்துக் கொண்டார். அவர்களின் நன்மதிப்பையும் இழந்தார்.

பகதூர்ஷா சித்தூரைக் கைப்பற்றி முடிக்கும்வரை காத்திருந்த ஹுமாயூன் அதன்பின்னர் பகதூர்ஷா மீது படையெடுத்தார். 1535ல் மாண்டசோர் என்ற இடத்தில் பகதூர்ஷா தோற்கடிக்கப்பட்டார். அங்கிருந்து மாண்டு என்ற இடத்திற்கு ஓடினார் பகதூர்ஷா. பின்னர் அங்கிருந்த சாம்பனார் என்ற கோட்டைக்கு ஓடினார். ஹுமாயூனும் விடாது பின் தொடர்ந்து அந்தக் கோட்டையையும் கைப்பற்றினார். சாம்பனிரிலிருந்து பகதூர்ஷா அகமதாபாத்துக்கு ஓடி பின்னர் டையூ தீவில் அடைக்கலமடைந்தார். இவ்வாறு 1535 ஆகஸ்ட் மாதத்திற்குள் மத்திய குஜராத் ஹுமாயூன் வசமானது. குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றிய ஹுமாயூன் அப்பகுதிகளுக்கு கவர்னராக தன் சகோதரரர் அஸ்காரியை நியமித்தார்.

**குஜராத், மாளவம் ஆகியவற்றை ஹுமாயூன் இழத்தல்**

குஜரத்தையும், மாளவத்தையும் கைப்பற்றியதே ஹுமாயூனின் பெரும் சாதனையாகும். ஆனால் அங்கு களியாட்டங்களில் ஈடுபட்டார் ஹுமாயூன். இந்த படையெடுப்புகளின் விளைவாகத் தனக்குக் கிடைத்த பெருஞ்செல்வத்தை விரயம் செய்தார். இதன் காரணமாக குஜராத்திலும், மாளவத்திலும் கலவரங்கள் தோன்றின. அஸ்காரியும், அவரது வீரர்களும் களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பகதூர்ஷா மீண்டும் படை திரட்டி வந்து குஜராத்தையும், மாளவத்தையும் கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறு ஹுமாயூன் ஒரு வருடத்தில் மிக வேகமாக இரண்டு பெரிய மாகாணங்களை வென்றவர் அடுத்த ஆண்டிலேயே அவைகளை இழந்துவிட்டார். ஹுமாயூனின் வாழ்க்கையில் அடுத்த கட்டம் ஆப்கானியங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தலைவரான ஷெர்கானுடன் போர் செய்ய வேண்டிய நிலையாகும்.

**ஷெர்கானுடன் போர் 1537-39**

கி.பி.1532ம் ஆண்ட முதல் ஷெர்கானின் அதிகாரம் வளர ஆரம்பித்தது. தனது அதிகாரத்தை வங்காளத்திலும், பீகாரிலும் வலுப்படுத்திக்கொண்டார். அவர் ஆட்சிபுரிந்த பகுதிகளின் அளவு இருமடங்காகியது. ஆட்சிமுறையைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தினார். ஆனால் ஷெர்கானின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் ஹுமாயூன் மேற்கொள்ளவில்லை. 1537ம் ஆண்டில் தான் ஷெர்கானுக்கெதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உணர்ந்தார்.

எனவே ஷெர்கானுக்குச் சொந்தமான சூனார் கோட்டையை 1537 ஜுலை மாதம் முற்றுகையிட்டார். சுமார் ஆறு மாத கால முற்றுகைக்குப் பிறகு சூனார்கோட்டை கைப்பற்றப்பட்டது. ஆனால் இது ராணுவரீதியாக பெரும் சாதனை என்று கருதப்பட்டாலும் ஹுமாயூனுக்கு சூனார் கோட்டை அதிக பயனில்லாததாக இருந்தது. சூனார் பகுதியானது எந்த தரை மார்க்கமாகவும் கேந்திர இடமாக இல்லை. எனவே சூனாரில் பல மாதங்களை வீணாக

செலவிட்டு விட்டார் என்று வரலாற்றாசிரியர்கள் மதிப்பிடுகின்றனர். ஹுமாயூனின் சூனார் முற்றுகையின்போது ஷெர்கான் வங்காள அரசரைத் தோற்கடித்து தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். அத்துடன் கௌர் என்ற இடத்தில் தான் வைத்திருந்த பொக்கிஷத்தை வேறு இடத்திற்கு கொண்டு சென்றுவிட்டார் ஷெர்கான்.

**ஹுமாயூன் வங்காளத்தைக் கைப்பற்ற எண்ணுதல்**

சூனார் கைப்பற்றப்பட்ட பின்னர் ஹுமாயூன் வங்காளத்தைக் கைப்பற்ற எண்ணி 1538 ஆகஸ்ட் மாதம் கௌர் சென்றடைந்தார். கௌர் நகரம் நெருப்பிடப்பட்டு அழிக்கப்பட்டது. ஆனால் அதன்பின் அங்கு சுமார் எட்டுமாதம் தங்கி விலை மதிப்பற்ற காலத்தை களியாட்டங்களில் வீணாக்கினார். இந்த நேரத்தில் ஷெர்கான் டில்லி, ஆக்ராவிலிருந்து ஹுமாயூனுக்கு யாதொரு உதவியும் கிடைக்கதாதவாறு எல்லாத் தொடர்புகளையும் துண்டித்துவிட்டார். அத்துடன் காரார், கன்னோசி, சாம்பல் முதலிய இடங்களையும் பிடித்துக் கொண்டார். இழந்த சூனார் கோட்டையையும் மீட்டுக் கொண்டார். இவ்வாறு எல்லாப் பக்கங்களிலும் ஷெர்கானால் எதிர்க்கப்பட்டார். இந்த சூழ்நிலையில் ஹுமாயூனின் சகோதரர் ஹிண்டால் பீகாரிலிருந்து ஆக்ரா சென்று அங்கு கலகம் விளைவித்தார். எனவே உடனடியாக அக்கலகத்தை அடக்குவதற்காக 1539 மார்ச் மாதம் ஆக்ரா திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

**சௌசாப் போர், 1539 ஜுன் ,7**

வங்காளத்திலிருந்து ஆக்ரா புறப்பட்ட ஹுமாயூன் ஆக்ரா செல்ல முடியாதவாறு வழியில் ஷெர்கானால் தடை செய்யப்பட்டார். ஷெர்கானின் படைகள் கங்கைக்கரை ஓரத்தில் அமைந்த சௌசா என்ற இடத்தில் ஹுமாயூனின் படைகளுடன் சந்தித்தன. அனால் தாக்குதல்கள் உடனடியாக மேற்கொள்ளப் படவில்லை. காலம் கடத்தப்பட்டது. மூன்று மாத காலம் தாக்குதல் நடத்தப்படாமல் படைகள் பாசரையிலேயே முடங்கிக் கிடந்தன. இந்த காலதாமதமும் ஷெர்கானுக்கு அனுகூலமாகவே இருந்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு மழை பெய்ய ஆரம்பித்தது. முகலாயப்படை தங்கியிருந்த பாசரைகள் வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் முகலாயப் படைவீரர்களின் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. இந்த சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஷெர்கான் உடனடியாக தாக்குதல் நடத்த ஆரம்பித்தார். 1539ல் நடைபெற்ற இந்த சௌசா போரில் ஹுமாயூன் பெருந்தோல்வி அடைந்தார். முகலாய வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். ஹுமாயூன் போர்களத்திலிருந்து தப்பி ஓடி கங்கை நதியைக் கடக்க முயன்றபோது நதியில் விழுந்துவிட்டார். தண்ணீர் சுமப்பவன் ஒருவனால் காப்பாற்றப்பட்ட ஹுமாயூன் ஆக்ரா ஓடிவந்தார். ஆக்ராவுக்கு வந்த பேரரசர் தனக்கு உதவி செய்யாத தனது சகோதரர்களை மன்னித்துவிட்டார். சௌசா வெற்றிக்குப்பிறகு ஷெர்கான் தன்னை வங்காள அரசராகப் பிரகடனப் படுத்திக் கொண்டார். ஷெர்ஷா என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார்.

**கன்னோசிப்போர் 1540**

ஆக்ரா ஓடிவந்த ஹுமாயூன் தன் சகோதரர்களான கம்ரானையும், ஹிண்டாலையும் அழைத்து ஆலோசனை செய்தார். அதன் ஹுமாயூன் நாற்பதாயிரம் வீரர்களைத் திரட்டினார். இருபடைகளும் 1540 மே 17ம் தேதி கன்னோசியில் சந்தித்தன. இப்போரிலும் ஹுமாயூன் ஒரு மாத காலம் தாக்குதல் நடத்தாது சும்மா இருந்துவிட்டார். ஷெர்ஷா எதிர்பராமல் போரை

ஆரம்பித்ததால் ஹுமாயூனால் முகலாயப் பீரங்கி படையை போர்க்களத்தின் முன்னனிக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. முகலாயப்படை ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்டது. கன்னோசியும் ஷெர்ஷாவினால் கைப்பற்றப்பட்டது.

ஹுமாயூன் தப்பி ஓடி ஆக்ராவுக்கும் பின்னர் டில்லிக்கும் ஓடிய போது ஷெர்ஷாவும் அவரைப்பின் தொடர்ந்த முதலில் ஆக்ராவையும், பின்னர் டில்லியையும் கைப்பற்றினார். ஹுமாயூன் நாடிழந்து லாகூருக்கு ஓடிவிட்டார். டில்லியில் சூர்வசத்தைச் சேர்ந்த அரசாட்சி நிறுவப்பட்டது.

**ஹுமாயூன் நாட்டை இழந்து திரிதலும், மீண்டும் இழந்த நாட்டை கைப்பற்றுதலும் 1540-1555**

ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்ட ஹுமாயூன் மூன்று ஆண்டுகள் ரஜபுதனத்திலும், சிந்து நாட்டின் பாலைவனப் பகுதிகளிலும் அலைந்து திரிந்து சொல்ல முடியாத துயரங்களை அடைந்தார். சிந்து பாலைவனங்களில் அலைந்து கொண்டிருந்த போதுதான் 1542ல் ஹமீதாபானுபேகம் என்பவளை மணந்தார். அதன்பின் ஜோதிபுரியின் ராஜா மால்தேவ் ஹுமாயூனுக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். 1542ல் அவர் நாட்டிற்குச் சென்ற ஹுமாயூன் விரைவில் அந்த மன்னரின் மனம் மாறிவிட்டதையும் அவர் தன்னை கைது செய்து ஷெர்ஷாவிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதையும் அறிந்த ஹுமாயூன் ஜோதிபுரிக்குச் செல்லாமல் அமர்கோட்டைக்குச் சென்றார். அதன் இந்து தலைவரான ராணாபிரதாப் என்பவர் ஹுமாயூனை நல்ல முறையில் வரவேற்றார். இங்கேதான் 1542- நவம்பர் 23ல் ஹமீதா பானுபேகம் அக்பர் என்ற மகனை பெற்றெடுத்தார்.

இச்சமயத்தில் ஹுமாயூனின் சகோதரர்கள் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர். ஆகவே தனது மனைவியையும் மகன் அக்பரையும் காந்த காரில் இருக்கச் செய்துவிட்டு 1554ல் பராசீகத்திற்கு சென்றார். பாரசீக அரசர் ஷாதாமஸ்ப்ல படைகளை ஹுமாயூனுக்கு கொடுத்து உதவினார். ஹுமாயூன் ஷியா மதக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் வெற்றி பெற்றால் காந்தகாரைத் தனக்குத் தந்துவிட வேண்டுமென்றும் வாக்குறுதி வாங்கினார்.

அந்தப் படையுடன் ஹுமாயூன் காந்த காரையும் காபூலையும் 1545ல் கைப்பற்றினார். வாக்குறுதிப்படி காந்த காரை பாரசீகர்கட்குக் கொடுத்தாலும் ஷாதாமஸ் மரணத்துக்குப் பின்னர் ஹுமாயூன் அதனைத் தன் கீழ் கொண்டு வந்தார். காபூல் கைப்பற்றப்பட்டது. கம்ரான் கைதியாக்கப்பட்டு பின்னர் குருடாக்கப்பட்டு மெக்காவுக்கு அனுப்பப்பட்டார். அஸ்காரியும் கைது செய்யப்பட்டு மெக்காவுக்கு அனுப்பப்பட்டார். ஹிண்டால் போரின்போது இறந்துவிட்டார். இவ்வாறு சகோதரர்களின் எதிர்ப்புகளிலிருந்து மீண்டுவிட்ட ஹுமாயூன் இந்தியா மீது படையெடுக்கும் அனுகூலமான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கினார்.

ஷெர்ஷா 1545ல் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு டில்லி அரியணைக்கு கடும் போட்டி ஏற்பட்டது. எதிரிகளுக்கிடையே பலத்த சண்டைகள் நடந்தன. இதன் விளைவாக சூர்வம்சம் பலகீனமடைந்தது. எனவே இந்தியப் படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்தார் ஹுமாயூன். 1554 டிசம்பர் மாதம் பெஷாவரை அடைந்தார். 1555 பிப்ரவரி மாதம் லாகூரைக் கைப்பற்றினார். அப்போது பெயரளவில் டில்லி ஆட்சியாளராக இருந்த சிக்கந்தர் சூர் என்பவரை 1555ல் மேக்கிவாரா என்ற இடத்திலும் பின்னர் சிர்கிந்த் என்ற இடத்திலும்

தோற்கடித்தார். இதன் விளைவாக பதினைந்து ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் மீண்டும் ஹுமாயூன் 1555 ஜுலை 23ல் டில்லி அரியணையில் அமர்ந்தார்.

**ஹுமாயூனின் மரணம் 1556**

ஹுமாயூன் தான் இழந்த ராஜ்யத்தை மீண்டும் பெற்ற போதிலும் அவர் நீண்டகாலம் ஆட்சி செய்ய கொடுத்து வைக்கவில்லை. தனது ராஜ்யத்தை வலுப்படுத்தவோ, ஒழுங்கான ஆட்சி முறையை நிறுவவோ அவரால் முடியவில்லை. முறையாக ஆறு மாதங்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடிந்தது. டில்லியில் தனது தீன்பனா என்ற நூல்நிலையத்தின் மேல் அடுக்கில் குறிநூல் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு கீழே இறங்கி வருகையில் படிக்கட்டுகளில் தவறி விழுந்து உயிர்விட்டார் ஹுமாயூன். ஆயுள் காலம் முழுவதும் இடற்பட்டு வாழ்ந்த ஹுமாயூன் இடறிவிழுந்து இடற் நிறைந்த தனது உயிரை நீத்தார் என்பது வியப்பிற்குரியதாகும்.

ஹுமாயூன் ஒரு பண்புள்ள மனிதர் என்று அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். ஒரு மனிதருக்கு இருக்க வேண்டிய அத்தனை சிறப்பியல்புகளும் அவரிடம் காணப்பட்டன. மரணப் படுக்கையிலிருந்த தன் தந்தை கூறிய அறிவுரைப்படியே நடந்தார். எனவேதான் தனக்குத் துரோகம் செய்த சகோதரர்களை மீண்டும் மீண்டும் மன்னித்தார். ஹுமாயூன் சிறந்த அறிவாற்றல் கொண்டவர். நண்பர்களுடன் விவாதிப்பதில் அளவற்ற மகிழ்ச்சி அடைவார். அதிக இரக்க குணம் கொண்டவர். தாராளமாக பிறருக்கு உதவி செய்தார். ஆனால் அவரிடம் இருந்த குடிப்பழக்கமே அவரைக் கெடுத்தது. வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள் மற்றும் கவலைகளின் காரணமாக அவர் அளவுக்கு மீறி மது அருந்தினார். எனவேதான் ஹுமாயூன் ஒரு சிறந்த அரசனாக ஆக முடியாமல் போய்விட்டது.

ஹுமாயூன் இஸ்லாம் மதத்தில் உண்மையான பற்றுக் கொண்டவர். ஆனால் அவரிடம் மதவெறி காணப்படவில்லை. அவரது மனைவியான ஹமிதாபானுபேகம் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர். அவரது நண்பர் பைராம்கானும் ஒரு ஷியாவே. இந்துக்களை ஹுமாயூன் கொடுமைப்படுத்தவில்லை. மாறுப்பட்ட மதக்கருத்துக் கொண்டவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். இவர் தீன்பனா என்ற புதிய அரண்மனையை நிர்மாணித்தார்.

ஹுமாயூன் ஒரு சிறந்த நிர்வாகி அல்ல. தனது பத்தாண்டுகால அரசாட்சியின் போது நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த எந்த முயற்சியும் அவர் எடுக்கவில்லை. பாராட்டப்படத்தக்க எந்த சீர்திருத்தங்களையும் அவர் செய்யவில்லை. எனவேதான் அவருக்கு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்காமல் போய்விட்டது.

## 3. Sher Shah

**ஷெர்ஷா - 1540-1545**

பாபர் இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு 1530 டிசம்பர் 29ம் தேதி அவரது மகன் ஹுமாயூன் அரியணையேறினார். அவர் அரியணை ஏறியபோது பாபரால் உருவாக்கப்பட்ட புதிய பேரரசை ஒருமுகப்படுத்தும் கடினமான பொறுப்பு அவருக்கு இருந்தது அப்போதிருந்த சூழ்நிலையில் படைத்துறையில் பேரறிவும், அரசியல் சூழ்ச்சித்திறமும், அரசியல் ஞானமும்

உடைய ஓர் ஆட்சியாளரே நாட்டிற்குத் தேவைப்பட்டார். ஆனால் ஹுமாயூன் இவற்றில் ஒன்றையும் பெற்றிருக்கவில்லை. ஞானமும், ஆயுள் திறனும், வலிமையான மன உறுதியும், இடைவிடா ஊக்கமும் இவரிடம் இல்லை. எனவே இவருக்கு ரஜபுத்திரர்களின் எதிர்ப்பும் ஆப்கானியங்களின் எதிர்ப்பும் இருந்தது. ஆப்கானிய இனத்தின் சூர் வம்சத்தைச் சார்ந்த ஷெர்கான் சூர் என்பவர் ஹுமாயூனின் ஆற்றலின்மையைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை வலிமைப்படுத்தி, இறுதியில் ஹுமாயூனைத் தோற்கடித்து டில்லி அரியணையில் அமர்ந்தார்.

முகலாயர்களின் ஆட்சியை வீழ்த்தி சூர்வம்சத்தினரின் ஆட்சியையும் ஆப்கானியரின் மாட்சியையும் இந்திய வரலாற்றில் ஏற்படுத்தியவர் ஷெர்ஷா கி.பி.1540ல் அரியணை ஏறிய இவர் இந்தியப் பெரும் பேரரசர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் தான் ஆட்சி செய்த ஐந்து ஆண்டுகளில் சாதித்த சாதனைகள் அற்புதமானவை. தலைசிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தியவர் ஷெர்ஷா

**ஷெர்ஷாவின் வாழ்க்கைக் குறிப்பு**

ஷெர்ஷாவின் இயற்பெயர் பரீத் என்பதாகும். தந்தையின் பெயர் ஹாசன். 1472ம் ஆண்டு ஹோஷியார்பூர் மாவட்டத்திலுள்ள பஜ்வாரா என்ற ஊரில் பிறந்தார். தந்தை ஹாசன் பீகாரிலுள்ள சசராம் என்ற இடத்தில் ஜாகீர்தாராக இருந்தார். ஆப்கானிய இனத்தில் சூர்வம்சத்தைச் சேர்ந்த ஹாசன் மற்ற பிரபுக்களைப்போல பல மனைவிகளைக் கொண்டிருந்தார். தனது தந்தை மாற்றாந்தாய் ஒருவரிடம் அடிமையாக இருந்துவிட்டதால் பரீத் அலட்சியம் செய்யப்பட்டார். எனவே தனது 22ம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறி ஜான்பூர் வந்தார் பரீத்

ஜான்பூரின் ஆட்சித் தலைவர் ஜமால் கானின் ஆதரவைப் பெற்று, பராசீக அராபிய மொழி பயின்றார். ஜமால்கான் பரீத்துக்கும் அவரது தந்தைக்கும் சமரசம் செய்து வைத்தார். எனவே சசராம் வந்து தனது தந்தையின் ஜாகீரை திறம்பட நிர்வகித்தார். நல்ல சீர்த்திருத்தங்களைப் புகுத்தினார். வரி அமைப்பு முறைகளை ஒழுங்குப்படுத்தினார். கலகக்காரர்களை அடக்கினார். பரீத்தின் புகழைக்கண்ட மாற்றாந்தாய் மீண்டும் பொறாமைப்பட்டு பரீத்துக்கு துன்பம் கொடுத்தார். எனவே மீண்டும் சசராமைவிட்டு நீங்கி ஆக்ரா வந்தார். 1519ல் தனது தந்தையின் ஜாகீர்கட்கு சட்டப்படியான வாரிசுரிமை பெற்றார். 1525ல் பீகாரில் சுதந்திரமாக ஆட்சி செய்து வந்த பகர்கான் லோகானியிடம் வேலைக்கமர்ந்தார். தன் தலைவனிடம் நன்றியுணர்வுடன் நடந்து அவரது நன்மதிப்பைப் பெற்றார். ஒரு சமயம் பரீத் தனித்து நின்று ஒரு புலியுடன் போராடி அதனைக் கொன்றதால் அவரது வீரத்தைப் பாராட்டி அவருக்கு ஷெர்கான் என்ற பட்டத்தை அளித்தார் பகர்கான்.

## 4. Akbar the Great

**அக்பர் 1556-1605**

அக்பர் இந்திய வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் புகழ்மிக்க அரசராவார். இவர் இந்திய வரலாற்றில் அரை நூற்றாண்டு காலம் வரை ஆட்சி செய்து ஒரு தேசியப் பேரரசர் என்ற

பெருமை பெற்றவர். தனது மாபெரும் வெற்றிகளின் மூலம் முகலாய ஆட்சியை உறுதியாக இந்தியாவில் அமைத்தவர் அக்பர். முகலாய நிர்வாக முறையும் நிலை நிறுத்தப்பட்டது. முகலாயப் பேரரசர்களிலே மாபெரும் மன்னராகக் கருதப்படுகிறார் அக்பர்.

ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்ட ஹுமாயூன் நாடோடியாக சிந்து பிரதேசத்தில் அலைந்து கொண்டிருந்தபோது ஹமீதாபானுபேகம் என்பவளை 1541 ஆகஸ்ட் 29ல் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு அமர்கோட் என்ற இடத்திலுள்ள வீரசால் என்ற அரண்மனையில் 1542 நவம்பர் 23ம் தேதி ஞாயற்றுக்கிழமை அக்பர் பிறந்தார். பகைவர்களால் சூழப்பட்டு அங்குமிங்கும் ஓடிய ஹுமாயூன் தனது மகன் அக்பரை விசுவாசமுள்ள வீரர் பைராம்கானிடம் ஒப்படைத்தார். பின்னர் பராசீக மன்னரின் ஷாதாமஸ்ப் உதவியுடன் 1545ல் காந்தகார் மற்றும் காபூலைக் கைப்பற்றினார்.

1545ல் ஷெர்ஷா இறந்த பின்னர் டில்லிப்பேரரசு பலவீனமடைந்தது. ஆப்கானியர் ஆட்சியின் கீழ் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஷெர்ஷாவுக்குப்பின் பதவிக்கு வந்தவர்கள் திறமையற்றவர்கள். 1555ல் ஹுமாயூன் நல்ல தருணம் பார்த்து இந்தியாவினுள் நுழைந்தார். பைராம்கானுடன் சேர்ந்து 1555 ஜுன்மாதம் ஆப்கானியரின் தலைவரும் டில்லி அரசருமாக இருந்தவரான சிக்கந்தர் சூரை சிர்ஹிந்த் என்ற இடத்தில் தோற்கடித்து ஆக்ராவையும், டில்லியையும் கைப்பற்றினார். ஆனால் ஆறுமாத காலத்திற்குள் மரணமடைந்தார்.

ஹுமாயூன் மரணமடைந்தபோது அக்பர் பஞ்சாபயில் கலனோர் என்ற இடத்தில் இருந்தார். அப்போது அவருக்கு வயது 13. ஹுமாயூன் இறந்தவுடன் கலோனோரில் 1556 பிப்ரவரி 14ம் தேதி மன்னராக அக்பருக்கு முடிசூட்டப்பட்டது. அக்பரின் பாதுகாப்பாளராக பைராம்கான் இப்போது அக்பரின் அரசு பாதுகாப்பாளர் ஆனார். |

**இரண்டாம் பானிபட் யுத்தம் 1556**

அக்பர் பதவியேற்ற போது வட இந்தியாவில் அரசியல் குழப்பமானதாக காணப்பட்டது. எல்லா மாகாணங்களும் குழப்பத்தில் இருந்தன. வடமேற்கிலுள்ள காபூல் மீர்ஷாஹக்கிம் என்பவர் ஆட்சியின் கீழ் வந்தது. காஷ்மீரும் ஹிமாலயப் பிரதேசங்களும் சுதந்திரமாக இயங்கின. ஒரிசா, மாளவம், குஜரத் ஆகிய நாடுகள் சுதந்திரமாகச் செயல்பட்டன. கோவாவிலும், டையுவிலும் போர்ச்சுக்கீஸியர் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். வங்காளம் முகமது அடில்ஷாவின் ஆதிக்கத்திலும் பஞ்சாப் சிக்கந்தர் சூரின் ஆதிக்கத்திலும் இருந்தன. இவ்வாறான சூழ்நிலையில் அக்பர் ஆளத்தொடங்கினார்.

ஹுமாயூன் மரணமடைந்தவுடன் அக்பர் கலோனாரில் முடிசூட்டப்பட்டார். ஆனால் பீகாரை ஆண்ட முகமது அடில்ஷாவின் தளபதி ஹெமு என்பவர் மீண்டும் டில்லியில் ஆப்கான் ஆட்சியை ஏற்படுத்த முயன்றார். தனது படையுடன் முதலில் ஆக்ராவைப் பிடித்தார். பின்னர் டில்லியின் மீது படையெடுத்து, அங்கிருந்த முகலாய கவர்னரான டார்டிபெக்கை விரட்டியடித்தார். டில்லியைப் பிடித்தவுடன் தன்னைப் பேரரசராகப் பிரகடனப்படுத்தினார். ராஜாவிக்கிரமாதித்தன் என்ற புனைப் பெயரையும் தமக்குச் சூட்டி கொண்டார்.

எனவே பைராம்கான் தன்னிடமிருந்த ஓர் சிறிய படையுடன் அக்பருடன் டில்லியை நோக்கி வந்தார். பத்தாயிரம் காலாட்படையினரும், வில்லாளிகளும் அடங்கியது அக்பரின்

படை. ஆனால் ஹெமுவின் படையோ ஒரு லட்சம் வீரர்களையும் 1500 யானைகளையும் கொண்டது. போர் 1556 நவம்பர் 5ல் பானிபட் போர்களத்தில் நடைபெற்றது. ஆரம்பத்தில் அக்பர் தோல்வியைத் தழுவினார். ஆனால் திடீரெனப் பாய்ந்து வந்த அம்பு ஒன்று ஹெமுவின் வலது கண்ணில் பாயவே மயங்கி விழுந்தார். ஆனால் ஹெமு இறந்துவிட்டதாகக் கருதிய அவரது படைவீரர்கள் சிதறி ஓடினர். குற்றுயிராகக் கிடந்த ஹெமு அக்பர் முன்பு கொண்டுவரப்பட்டு பைராம்கானால் கொல்லப்பட்டார். ஹெமுவின் தலை காபூலுக்கு அனுப்பப்பட்டது. உடல் டில்லி கோட்டையின் முன்பு தொங்கவிடப்பட்டது.

இரண்டாம் பானிபட் போர் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது. இந்தியாவில் மேலாண்மைக்காக நடந்த போரில் ஆப்கானியர் தோற்றுவிட்டனர். முகலாயர் வென்றனர். டில்லியில் முகலாயர் ஆட்சி வலிமையடைந்து.

**பைராம்கானின் எழுச்சியும், வீழ்ச்சியும் 1556-60**

அக்பரின் பாதுகாப்பாளராக விளங்கிய பைராம்கான் மத்திய ஆசியாவிலிருந்த பாடக்ஷன் பகுதியைச் சேர்ந்தவர். ஷியா மதப்பிரிவைச் சார்ந்தவர். இவர் திறமைமிக்க தளபதி. ஹுமாயூனிடமும் பின்னர் அக்பரிடமும் பணியாற்றினார். ஹுமாயூன் நாடோடியாகத் திரிந்தபோதும் மீண்டும் அவர் டில்லி அரியணையைக் கைப்பற்றிய போதும் பைராம்கான் பேருதவி புரிந்தார் பின்னர் அக்பர் பதவி ஏற்றபோதும் இரண்டாம் பானிபட் யுத்தத்தில் அக்பருக்காக போரிட்டு ஹெமுவை அழித்தார். அக்பர் டில்லி அரியணையில் அமர்வதற்குக் காரணமே பைராம்கான்தான்.

இரண்டாம் பானிபட் யுத்தத்திற்குப் பிறகு பைராம்கானின் புகழ் உயர்ந்தது. தொடர்ந்து அக்பருக்குப் பாதுகாவலராக நீடித்தார். நான்கு வருடங்களில் பஞ்சாப், ஜான்பூர், ஆஜ்மீர், குவாலியர் ஆகிய பகுதிகளை வெற்றி கண்டார். ஆனால் தனது பதவியை தவறாக பயன்படுத்த முற்பட்டார் பைராம்கான். தனது அரசியல் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தினார். அக்பரின் யானைப்பாகன், கவர்னர் டார்டிபெக் ஆகியோரை காரணமில்லாமல் கொன்றுவிட்டார். மேலும் தனது உறவினர்களுக்கு முக்கியப் பதவிகளை வழங்கினார். இவர் ஓர் ஷியா பிரிவினராக இருந்ததால் சன்னி பிரிவு பிரபுக்கள் இவரை வெறுத்தனர். எனவே பைரம்கான் அக்பரின் பாதுகாவலராக நீடித்தால் அரியணைக்கே ஆபத்தாக அமைந்துவிடும் என்று எண்ணிய அக்பரின் தாய் பேகமும், வளர்ப்புத்தாய் மாகம் அனகாவும் பைராம்கானை பதவியிலிருந்து விலகக் கூறினர். வளர்ந்துவிட்ட அக்பரும் பைராம்கான் மீது வெறுப்புக் கொண்டு ஆட்சியைத் தானே நேரடியாக நடத்த எண்ணினார்.

தனது விருப்பத்தை பைராம்கானிடம் தெரிவித்த போது ஆட்சியை அக்பரிடம் ஒப்படைத்துவிட்டு மெக்கா செல்லத் தயாரானர். ஆனால் பைராம்கானுக்கு உதவியாக பீர்முகமது என்பவரை அக்பர் அனுப்பவே கோபம் கொண்ட பைராம்கான் கலகம் செய்தார். ஆனால் அக்பரால் மன்னிக்கப்பட்டு மெக்கா செல்ல அனுமதிக்கப்பட்டார். ஆனால் போகும் வழியில் 1561 ஜனவரியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார்.

**அக்பரின் வெற்றிகள்**

பைராம்கானின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்பும் சுமார் இரண்டு ஆண்டுகள் தனது வளர்ப்புத் தாயாகிய மாகம் அனகாவின் ஆதிக்கத்திற்குள் உட்பட்டிருந்ததாக ஆசிரியர் வின்சன்ட் ஸ்மித் கூறுகிரர். 1560-62 வரை உள்ள இரண்டு ஆண்டு கால அக்பரின் ஆட்சியை பெண்களின் ஆட்சி என்று சொல்கிறார்.

அக்பர் தனது தாத்தா பாபரைப்போல நாடுகளைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டிருந்தார். தனது பேரரசை விரிவுபடுத்தும் எண்ணத்தில் 1561 முதல் 1601 வரை தொடர்ந்து படையெடுப்புகளில் ஈடுபட்டார். தனது வலிமையெல்லாம் கொண்டு தாக்கி ஒவ்வொரு நாடாக இணைத்தார். தான் கைப்பற்றிய நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்தி நிலையான அரசை ஏற்படுத்தினார். தான் ஆண்ட நாற்பது ஆண்டு காலத்தில் நிலையான பேரரசை நிலைநாட்டி இந்தியாவின் ஒற்றுமைக்கு அடிகோலினார் என்றால் மிகையாகாது.

**குவாலியர், ஜான்பூர், ஆஜ்மீர் 1556-60**

பைராம்கான் அக்பருக்குப் பாதுகாவலாக இருந்தபோது இந்தப் பகுதிகள் முகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டுவிட்டன.

**மாளவம்**

அக்பர் 1561ல் மாகம் அனகாவின் மகனான ஆதம்கானை மாளவத்தின் மீது படையெடுக்குமாறு பணித்தார். மாளவத்தின் மன்னரான பாஸ்பகதூர் தோற்கடிக்கப்பட்டார் மாளவம் இணைக்கப்பட்டது. முற்றுகையின் போது அரசர் மாண்டார் என்ற செய்தியறிந்த இந்து மனைவி ரூப்மதி மரணத்தைத் தழுவினாள்.

**கோண்ட்வானா 1564**

மத்தியப் பிரதேசத்திலிருந்த ஒரு சிறிய இரஜபுத்திர நாடு கோண்ட்வானா. அப்போது அதனை இளம் வயதினரான வீர்நாராயணனின் பகர ஆட்சியாளராக ராணி துர்க்காவதி ஆண்டு வந்தாள். 1564ல் கோண்ட்வானாவைக் கைப்பற்ற காராவின் கவர்னரான ஆசப்கானை அனுப்பினார் அக்பர். பேரழகியான துர்காவதி தீரமுடன் போரிட்டாள். இறுதியில் தோற்றுப்போனாள். வீரநாராயணன் போரில் கொல்லப்பட்டார். அவமானப்படுவதைத் தடுக்க துர்காவதி தற்கொலை செய்து கொண்டாள். ரஜபுத்திர மகளிர் தங்கள் கற்பைக் காக்க ஜௌஹார் எனப்படும் தீக்குளிப்பு செய்தனர். கோண்ட்வானா அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

**மேவார் 1568**

அக்பரின் போர்க்கள் வரலாற்றில் 1568ல் நடந்த சித்தூர் முற்றுகையும் வெற்றியும் முக்கியத்துவம் வாய்ந்தது. இரஜபுதன நாடுகளிலேயே வலிமையும், புகழும் நிறைந்தது மேவார் நாடு. இதன் தலைநகரமாகவும், வலிமையின் சின்னமாகவும் விளங்கியது சித்தூர் . சித்தூரை ஆண்டு வந்தவர் உதய்சிங் ஆவார். மேவார் நாட்டு அரச குடும்பத்தவர்கள் அக்பரையும் அவரது வம்சத்தாரையும் தாழ்ந்த குலத்தவராகக் கருதினர். அக்பரோ சித்தூரையும், ரான்தம்பூரையும் வெற்றி கண்டால் தான் தனது முகலாய சாம்ராஜ்யத்தை நிறுவ முடியும் என்று நினைத்தார்.

எனவே 1567 அக்டோபர் 20ல் சித்தூரை முற்றுகையிட்டார். உதய்சிங் தப்பி ஓடி காட்டிற்குள் ஒளிந்து கெண்டார். ஆனால் ஜெய்மல், பட்டா ஆகிய இரண்டு தளபதிகளின் தலைமையில் இரஜபுத்திரர்கள் தொடர்ந்து போரிட்டனர். ஜெய்மால் அக்பரின் துப்பாக்கிக் குண்டுப்பட்டு வீழ்ந்தாலும் இரஜபுத்திர வீரர்கள் இறுதிவரை போரிட்டனர். சித்தூர் கோட்டை வீழ்ந்தது. அழகான இரஜபுத்திர இளவரசிகள் தங்கள் வழக்கப்படி ஜௌஹார் முறையைப் பின்பற்றி தீக்குளித்து மாண்டனர். வெற்றி வீரராக அக்பர் சித்தூர் நகரில் நுழைந்தவுடன் படுகொலைக்கு உத்தரவிட்டார். சுமார் முப்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனர். சித்தூரின் வீழ்ச்சிக்குப்பின் இரஜபுத்திர அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக அக்பருக்கு அடிபணிந்தனர்.

**ரான்தம்பூர், கலிஞ்சார், பிகானர், ஜோத்பூர்**

1569ல் அக்பர் ரான்தம்பூர் கோட்டையைத் தாக்கினார். அக்கோட்டையின் மன்னர் சுர்ஜன்ஹரா அடிபணிந்தார். அதே ஆண்டில் கலிஞ்சாரின் தலைவர் இராஜாராமசந்திர் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார். 1570ல் பிகானரை ஆண்ட கல்யாணமால் அடிபணிந்தார். மேலும் ஜெய்சால்மார், ஜோத்பூர் ஆகியவையும் இணைக்கப்பட்டன.

**குஜராத் வெற்றி (1573)**

குஜராத்தின் வெற்றி அக்பரின் வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டமாகும் என்று வின்ஸன்ட் ஸ்மித் கூறுகிறார். குஜராத் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. செல்வச் செழிப்புடன் விளங்கியது. முன்னர் குஜராத் ஹுமாயூனால் கைப்பற்றப்பட்டது. ஆனால் மீண்டும் சுதந்திரம் அடைந்துவிட்டது. இதனால் அக்பர் குஜராத்தை கைப்பற்ற முடிவு செய்தார். அப்போது குஜராத்தை ஆண்டு வந்தவர் மூன்றாம் முஸபர்ஷா என்ற திறமையற்ற அரசர். குஜராத்தில் பல தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டை கலகம் செய்து கொண்டிருந்தனர். அங்குள் ஒரு குழப்பவாதியான இதிமத்கான் அக்பரை குஜராத்தின் மீது படையெடுத்துவர அழைத்தான். எனவே அக்பர்தானே படைக்குத் தலைமை தாங்கி குஜராத் மீது போர் தொடுத்தார். 1573ல் எல்லா எதிர்ப்புகளையும் முறியடித்து சூரத்தைக் கைப்பற்றினார். பின்னர் ஆக்ரா திரும்பினார். அக்பர் சென்றதும் மீண்டும் குஜராத்தில் பெரும் கிளர்ச்சிகள் தோன்றியதால், கோபமடைந்த அக்பர் மறுபடியும் பதினொரு நாட்களில் 600 மைல் கடந்து வந்து கிளர்ச்சியாளர்களை முழுமையாக ஒடுக்கினார். குஜராத் முகலாயப் பேரரசுடன் இணைந்த மாநிலமானது. வங்காளம், பீகார், ஒரிசா

ஷெர்ஷா காலத்தில் பீகாரின் கவர்னராக இருந்த சுலைமான் கரரானி என்பவர் தன் அதிகாரத்தை வங்காளத்திலும் நிலைநாட்டினார். ஆனால் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு நட்புடன் வாழ்ந்து வந்தார். 1572ல் சுலைமான் கராரானி இறந்தபின் பதவிக்கு வந்த அவரது மகன் தாவூத்கான் தன்னை சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்தினார். 1574ல் தாவுத்கானிற்கு எதிராக தாமே படையெடுத்துச் சென்று பாட்னாவிலிருந்து விரட்டினார். அக்பரின் தளபதி முனிம்கான் துகாராய், ராஜ்மகால் ஆகிய இடங்களில் தாவூத்கானைத் தோற்கடித்துக் கொன்றார். 1576ல் வங்காளமும், பீகாரும் முகலாயர் பேரரசுடன் இணைந்த பகுதியாகிவிட்டது. 1590, 1592ம் ஆண்டுகளில் அக்பர் தளபதி மான்சிங்கை அனுப்பி ஒரிசாவைக் கைப்பற்றினார்.

**காஷ்மீர் வெற்றி (1586)**

1586ல் காஷ்மீர் மீது அக்பர் படையெடுத்தார். இதற்குக் காரணம் காஷ்மீர் மன்னர் யூசுப்ஊரா தனது மக்களைக் கொடுமைப்படுத்தியதேயாகும். அக்பரின் தளபதிகளான பீர்பால், காசிம்கான், ராஜாபகவன்தாஸ் ஆகியோர் 6000 வீரர்களுடன் சென்று காஷ்மீர் மன்னரைத் தோற்கடித்தனர். காஷ்மீர் அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டது. ஆனால் இந்தப் போரில் தான் அக்பரின் அருமை நண்பர் பீர்பால் கொல்லப்பட்டுவிட்டார்.

**காபூல், கந்தகார் (1585)**

காபூலும், காந்தகாரும் வடமேற்கு எல்லைப்பகுதியில் மிக முக்கியமான ராணுவ இடமாகவும், வாணிக மையமாகவும் திகழ்ந்தன. மேற்கு நாடுகளிலிருந்து வருகிறவர்கள் இப்பகுதிகளின் வழியாகத்தான் இந்தியாவினுள் நுழையவேண்டும். எனவே காபூல், காந்தகார் ஆகிய இந்த எல்லைப்பகுதிகளை இணைத்துக் கொள்வது இன்றியமையாதது ஆகும். காபூல் அக்பரின் ஒன்றுவிட்ட சகோதரரான மீர்ஷா முகமது ஹக்கீம் என்பவரால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் சில பிரபுக்களுடன் சேர்ந்து கொண்டு அக்பரின் மேலாண்மையை ஏற்க மறுத்து தன்னிச்சையாக ஆண்டான். எனவே அக்பர் 1581ல் காபூல் மீது படையெடுத்து ஹக்கீமை தோற்கடித்து பணியவைத்தார். ஆனால் அவனது உண்மையான சேவையை எண்ணி மன்னித்துவிட்டார். 1585ல் ஹக்கீம் இறந்த பின்னர் காபூல் முறைப்படி பேரரசுடன் இணைக்கப்பட்டது.

இதன்பின் ராஜா தோடர்மால், பகவன்தாஸ், இளவரசர் மூரத் ஆகியோரை அனுப்பி சிந்து, பலுசிஸ்தானம், காந்த கார் ஆகிய பகுதிகளை வென்று வர ஆணையிட்டார். 1591ல் சிந்துவும் 1595ல் பலுசிஸ்தானமும் வெல்லப்பட்டன. காந்தகார் போர் தொடுக்காமலே இணைந்துவிட்டது. ஆனால் இந்தப் போர்களில் பகவன்தாசும், தோடர்மாலும் இறந்துவிட்டனர். இவ்வாறு வடமேற்கு எல்லைப்பகுதிகள் வெல்லப்பட்டு அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டன.